பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 11 வியாழக்கிழமை (27-09-2001) தொலைபேசி 3378 ஒலி 290

அதி நவீன மோஸ்தர்களில்
தரம் குன்றா
தங்க நகைகளுக்கு
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## தமிழீழ விடுதலைப் புலிகளின்

# மூத்த தலைவர் கேணல் சங்கர் கிளைமோர் தாக்குதலில் வீரச்சாவு

## ஒட்டுசுட்டானில் நேற்று சம்பவம்
## அரசின் சதியென புலிகள் குற்றச்சாட்டு

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களில் ஒருவரான கேணல் சங்கர் நேற்று வன்னியில் இடம் பெற்ற கிளைமோர்த் தாக்குதலுக்கிலக்காகி வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

இச்சம்பவம நேற்றுக் காலை 10.45 மணியளவில் ஒட்டு சுட்டானில் இடம் பெற்றுள்ளது. இக் கிளைமோர்த் தாக்குதலை ஸ்ரீலங்கா இராணுவமே மேற்கொண்டதாகப் புலிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

கேணல் சங்கரின் மரணம் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் நேற்றுஅறிக்கையொன்றை விடுத்துள்ளனர்.

அதில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது,

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இருபது ஆண்டுகள்வரை தீவிர பங்காற்றி வந்த கேணல் சங்கர் ஒரு மூத்த உறுப்பினர். தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு மிகவும் நெருங்கிய தோழர்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தலைவர் பிரபாகரனுடன் சேர்ந்து நோர்வே அரசின் சமாதானத் தூதுவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தியவர்.

தியாகி திலீபனின் நினைவை தமிழீழ மக்கள் நினைத்திருந்த நேற்றைய நாளில் சிங்கள இராணுவம் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் ஒருவரைப் பலி கொண்ட இத் தாக்குதல் நடவடிக்கையானது மிகவும்பார தூரமான ஆத்திர மூட்டும் செயலாக புலிகளின் தலைமைப்பீடம் கருதுகிறது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## கேணல் சங்கரின் வாழ்க்கைக் குறிப்பு

(வவுனியா)

ஒட்டு சுட்டான் பகுதியில் கிளைமோர்த் தாக்குதலில் வீரச்சாவடைந்த கேணல் சங்கர் விமானப் பொறியியலாளராகப் பட்டம் பெற்றவர்.

வல்வெட்டித் துறையைச் சேர்ந்த இவரது இயற்பெயர் வைத்திலிங்கம் சொர்ணலிங்கம் அவருக்கு வயது53.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் நெருங்கிய உறவினரான இவர் கைதடிப்பகுதியில் இடம் பெற்ற பவுசர் வெடிப்புச் சம்பவத்தின் போது வீரச்சாவடைந்த சித்தார்த்தன் மற்றும்குமரப்பா, புலேந்திரனுடன் சயனைட் உட் கொண்டு வீரச்சாவடைந்த மேஜர் நளின் (மனோகரன்) ஆகியோரின் சொந்த அண்ணுமாவார்.

கேணல் சங்கர் விமானப் பைலட்டாக இங்கிலாந்தில் பயிற்சி பெற்றவர் புலிகளின் வான் படைக்குப் பொறுப்பானவர்என்றும் தெரிவிக்கப்படுகிறது. ஆங்கிலம், கணிதம் ஆகியவற்றில் சிறந்த புலமைத் தேர்ச்சி பெற்றிருந்தார் இவரது குடும்பம் போராளிக் குடும்பமாக விளங்கியது இவரது தந்தை ஓர் அரசாங்க உத்தியோகத்தர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ம)

## 83 இலங்கையரை ஏற்றிச்சென்றகப்பலில் தீ
### மூவர் பலி; சிலரைக் காணவில்லை

(கொழும்பு)

இலங்கையர் 83 பேருடன் சுயஸ் கால்வாயில்எண்ணெய் நிரப்பிக்கொண்டிருந்த கப்பலொன்று தீ விபத்திற்குள்ளாகி நீரில் மூழ்கியுள்ளது.

சுயஸ் கால்வாயில் நங்கூரமிட்டபடி வேறொருகப்பலில் இருந்து எண்ணெய் நிரப்பிக் கொண்டிருந்த போது திடீரென கப்பலில் தீப்பற்றிக் கொண்டது. இச்சம்பவத்தில் 3 பேர் கொல்லப்பட்டதுடன் சிலர் காணாமற் போய்விட்டதாகவும் தெரிவிக்கப்படுகி

(8-ம் பக்கம் பார்க்க)

## தபால் குண்டு வெடித்ததில்
### சப்இன்ஸ்பெக்டர் பலி

(கொழும்பு)

கல்முனைப் பொலிஸ் நிலையத்திற்கென முகவரியிடப்பட்ட தபால் பொதியொன்றினை திறந்தபோது அதற்குள் இருந்த குண்டு வெடித்ததால் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை

## இனப்பிரச்சினையை தீர்க்கும் அக்கறை சிங்களக் கட்சிகளுக்கு இல்லை
### புளொட் சித்தார்த்தன் சாடல்

அதிகாரப் பரவலாக்கலின் ஒருபகுதியாக சுயாதீன ஆணைக் குழுக்களிடம் நிறைவேற்று அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு வழி ஏற்

தை வீடு பற்றி எரியும்போது முற்றத்தைக் கூட்டுவதற்கு ஒப்பானதாகவே கருதுகிறோம். இவ்வாறு ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி

சுயஸ் கால்வாயில்எண்ணெய் நிரப்பிக்கொண்டிருந்த கப்பலொன்று தீ விபத்திற்குள்ளாகி நீரில் மூழ்கியுள்ளது.

சுயஸ் கால்வாயில் நங்கூரமிட்டபடி வேறொருகப்பலில் ரென கப்பலில் தீப்பற்றிக் கொண்டது; இச்சம்பவத்தில் 3 பேர் கொல்லப்பட்டதுடன் சிலர் காணாமற் போய்விட்டதாகவும் தெரிவிக்கப்படுகி

(8-ம் பக்கம் பார்க்க)

றினை திறந்தபோது அதற்குள் இருந்த குண்டு வெடித்ததால் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை கல்முனை பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

(ந-4)

அதிகாரப் பரவலாக்கலின் ஒருபகுதியாக சுயாதீன ஆணைக் குழுக்களிடம் நிறைவேற்று அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு வழி ஏற்படுத்தும் அரசியலமைப்பின் 17வது திருத்தத்திற்கான பாராளுமன்ற அங்கீகாரத்தை வீடு பற்றி எரியும்போது முற்றத்தைக் கூட்டுவதற்கு ஒப்பானதாகவே கருதுகிறோம். இவ்வாறு ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) அமைப்பின்தலைவர் த. சித்தார்த்தன் 17வது

(08ஆம் பக்கம் பார்க்க)

### அமுக்க வெடியில் சிக்கிய

# ஆட்டோ சாரதியும் நேற்று மரணம்

(கோப்பாய்)

இருபாலை கிழக்கு குளுக்கண்டி லேன் பகுதியில் ஆட்டோ அமுக்க வெடியில் சிக்கிச் சிதறியதனால் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஆட்டோ சாரதி நேற்று அதிகாலை வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

கட்டப்பிராய் விளையாட்டரங்க வீதியைச் சேர்ந்த முத்துலிங்கம் சசிகுமார் (வயது-34) என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தவராவர்.

கடந்த 24 திகதி தனது மகளின் குடும்பத்தைத

(08ம் பக்கம் பார்க்க)

### யாழ். பல்கலையில்

# திலீபனுக்கு அஞ்சலி

(வல்வெட்டித்துறை)

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைந்துள்ள பரமேசுவரர் ஆலயத்தின் முன்பாக நேற்று தியாகி திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந் நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

(உ-217)

# மாட்டுக்கு எறிந்த கல் தங்கைக்கு யமனானது

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

மாடுஒன்றை விரட்டுவதற்காக அண்ணன் எறிந்த கல் தங்கைக்கு யமனாகிய பரிதாபச்சம்பவம் ஒன்று வவுனியா பண்டாரிக்குளத்தில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா பண்டாரிக்குளத்தைச்சேர்ந்த பூபாலசிங்கம் ஜடா(வயது12)என்பவரே இவ்வாறு கல்லெறிக்கு இலக்காகி மரணமானவராவார்.

இச்சம்பவம் பற்றி மேலும்

08ஆம் பக்கம் பார்க்க

# வவுனியாவில் கைதான மாணவனை விடுவிக்குக

### செல்வம் எம்-பி கடிதம்

(வவுனியா)

கடந்த வெள்ளிக் கிழமை வவுனியாவில் வைத்து படையினரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்காக கொழும்பிற்கு அழைத்துச் செல்லப்பட்ட வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவன் தங்கவடிவேல் இன்பகரனின் விசாரணைகளை துரிதப்படுத்தி வவுனியா நீதி மன்றில் ஆஜராக்க நடவடிக்கை எடுக்குமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன்

(08ஆம் பக்கம் பார்க்க)

# ஆப்கான் மீது அமெ.தொடுக்கும் தாக்குதலுக்கு பெயர் மாற்றமாம்

(வாஷின்டன்)

ஆப்கான் மீது அமெரிக்கா தொடுக்கவிருக்கும்இராணுவ நடவடிக்கைக்கு 'வரம்பற்ற நீதி நடவடிக்கை' என்று பெயரிடப்பட்டமைக்கு உலக இஸ்லாமியதலைவர்கள் பலரும் எதிர்ப்பு தெரிவித்தமையால் மேற்படி இராணுவ நடவடிக்கைக்கு யூ.எஸ். ரேன்ஸ். என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதேவேளை சர்வதேச பயங்கரவாதத்திற்கெதிராக அமெரிக்கா எடுக்க விருக்கும் ராணுவ நடவடிக்கையானது ஒருமுறை தாக்குதல் என்றளவில் இருந்துவிடாது என அமெரிக்க பாதுகாப்பு துறை அமைச்சர் ஜோமில் ரம்சி தெரிவித்துள்ளார்.

இந்நடவடிக்கை மிகவும்

(08ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## சிறு விளம்பரம்

### கடைகள்

விற்பனைக்கு

கதிரேசன் கோவிலடி K.K.S வீதியில் நகைக் கடைக்கு உகந்த (10×30) சதுரடியைக் கொண்ட கடையும் பெரியகடை வீதியில் (மலயான் கபே வீதி) நல்ல வியாபாரம் செய்யக் கூடியதுமான புடைவைக் கடைக்கு உகந்த (14×40) சதுரடியைக் கொண்ட கடையும் விற்பனைக்கு உண்டு. (தொடர்பு கொள்ள T.P யினையும் குறிப்பிடவும்.) விண்ணப்பிக்க வேண்டிய முகவரி மே/பா வலம்புரி, விளம்பர இல:226, யாழ்ப்பாணம்.

(3586)


# இளைஞர் கலாசாரப்போட்டி முடிவுகள் நேற்று வெளியாகின

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட அலுவலகத்தினால் கடந்த சனி, ஞாயிறு திங்களில் நடத்தப்பட்ட இளைஞர் கலாசாரப் போட்டி - 2001 இற்கான முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டுள்ளன.

முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு.

**சாஸ்திரியப் பாடல் (தனி)**
முதலாம் இடம்
வி. வடிவாம்பிகை - துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை.
இரண்டாம் இடம்
சோ. குமுதா நல்லூர் யாழ்ப்பாணம்.
மூன்றாம் இடம்
மு. ஜெயானந்தவதி வல்வெட்டித்துறை.
தி. சந்திரமௌலிகா சர்மா - பரு. வீதிகோப்பாய் வடக்கு.

**அபிநய நடிப்பு (தனி)**
முதலாம் இடம்
ப. கேதீஸ் - கோவில் வீதி, மல்லாகம்.
இரண்டாம் இடம்
ப. தங்கேஸ் - கோவில் வீதி, மல்லாகம்.
மூன்றாம் இடம்
க. சர்மிலன் - நரியிட்டான், மல்லாகம்.

**குறுநாடகம்**
முதலாம் இடம்
யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள்.

**பேச்சு**
முதலாம் இடம்
பா. பாலகோபி, வளாக வீதி திருநெல்வேலி.
இரண்டாம் இடம்
கி. ஐங்கரன் - கமலபவனம், இளவாலை.
மூன்றாம் இடம்
சி. நந்தகுமார், சிவன் வீதி உரும்பிராய் கிழக்கு.

**கிராமியப்பாடல் (குழு)**
முதலாம் இடம்
சி. மலர்விழி - வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

**கிராமியப்பாடல் (தனி)**
முதலாம் இடம்
த. சந்திரமலர். அல்வாய் தெற்கு, வதிரி.
இரண்டாம் இடம்
மு. ஜெயானந்தவதி, அப்புக்குட்டியாவளவு, வல்வெட்டித்துறை.
மூன்றாம் இடம்
லோ. யாழினி அல்வாய் தெற்கு.
செ. சிவகௌரி 15, இலந்தைக்குளம், கொழும்புத்துறை.

**பரதநாட்டியம்**
முதலாம் இடம்:
ச. ஆனந்தஜோதி 75 அம்மன் வீதி, கந்தர்மடம்
இரண்டாம் இடம்
ம. ரோகினி-415, கோவில் வீதி, நல்லூர்.

**அறிவிப்பாளர்**
முதலாம் இடம்:
நா. சுகந்தி கே.கே.எஸ்வீதி இணுவில் மேற்கு.
இரண்டாம் இடம்;
க. தர்மினி, 38 கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
மூன்றாம் இடம்
ப. கேதீஸ், கோவில் வீதி, மல்லாகம்.

**புதிய நிர்மாணிப்பு நடனம் (குழு)**
முதலாம் இடம்
க. ஸ்ரீபாஸ்கரன் மந்திகை, புலோலி.

**ஓகன்**
முதலாம் இடம்
பூ. கருணைதாஸ், ஆஸ்பத்திரி வீதி, கோண்டாவில் கிழக்கு.
இரண்டாம் இடம்
அ. அந்தனிற்றா - வெளிச்சவீடு ஒழுங்கை, பருத்தித்துறை.

**கிராமிய நடனம் (குழு)**
முதலாம இடம்
க ஸ்ரீ. பாஸ்கரன் மந்திகை, புலோலி.

**மிருதங்கம்**
முதலாமிடம்
ப. சியாமாகிருஸ்ணா - 1203 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
இரண்டாம் இடம்
நா. மாதவன், ஆலங்குளாய் சண்டிலிப்பாய்.
மூன்றாம் இடம்
க. தர்மசேகரம், முகமாலை எழுதுமட்டுவாள்.

**வயலின்**
முதலாமிடம்
ப. சியாமாகிருஸ்ணா, 1203 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
இரண்டாமிடம்
தி. ஸ்ரீசந்திரமௌலிக சர்மா பருத்தித்துறை வீதி, கோப்பாய் வடக்கு.

(உ-3)

## மின்னல் தாக்கியது

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் இரவு கொக்குவில் கிழக்குப் பகுதி வீடொன்றை மின்னல் தக்கிய போதிலும் அங்கிருந்தவர்கள் தெய்வாதீனமாக காயங்கள் ஏதுமின்றித் தப்பிக் கொண்டதாகவும்

இருப்பினும் அங்கிருந்த வீட்டுமின்சுற்று. ஆழிகள் சிதறியுள்ளதுடன் ரீ.வி. அன்ரனா எரிந்து நாசமாகியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

(உ-19)

## தொழு நோய் விழிப்பு

(உடுவில்)

வலி. தெற்கு பிரதேச செயலக சுகாதாரப் பரிசோதகரின் ஏற்பாட்டில்சுன்னாகம்செல்லவளவு சனசமூக நிலையத்தில் தொழுநோய் பற்றிய வீடியோப் படக்காட்சி அண்மையில் காண்பிக்கப்பட்டது.

இதில் இந்நோய் ஏற்படுவதற்கான காரணம், நோயாளரைப் பராமரிக்கும் விதம் வைத்திய ஆலோசனைகள் போன்றவை இடம்பெற்றன.

[உ-129]

## இந்தியாவை புயல் தாக்கலாம்

(புதுடில்லி)

மத்திய அரபிக் கடலின் கிழக்குப் பகுதியில் மையங் கொண்டுள்ள காற்றுத் தாழமுக்கம் புயலாக விரிவடையக் கூடுமென அஞ்சப்படுகிறது.

மும்மையில் இருந்து 500 கிலோ மீற்றர் தொலைவில் மையங் கொண்டுள்ள புயல் குஜராத் மற்றும் மகாராஷ்டிர மாநிலங்களைநோக்கி நகரத் தொடங்கியுள்ளது.

இதனால் கரையோர குஜராத், மகாராஷ்டிர மக்களுக்கு புயல் எச்சரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது. (து)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

மௌன தவமுனிவர் பொ. கைலாசபதியின் "வாழ்வும் சிந்தனையும்" நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பண்டிதர். க. நாகலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் சிறப்புரைகளை அருட்கவி சி. விநாசித்தம்பி, ஓய்வுபெற்ற நீதிபதி மு. திருநாவுக்கரசு, ஆகியோரும்.

வெளியீட்டுரையை இளைப்பாறிய அதிபர் ஆ. சபாரத்தினமும், நூல் விமர்சனத்தை சைவப்புலவர் அ. செல்லத்துரை, க. சிற்றம்பலம் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (உ)

## பொதுக்கிணறுகள் புனரமைப்பு

சுன்னாகம் தெற்கு சபாபதி வீதியிலுள்ள மூன்று பொதுக் கிணறுகள் பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் உதவியுடன் அண்மையில்புனரமைப்பு செய்யப்பட்டு மக்கள் பாவனைக்காக விடப்பட்டுள்ளன.

மேற்படி நிறுவனத்தினால் இப்பகுதி மக்களுக்கு நீர்ச் சுகாதாரம், குடல் நோய்கள் சம்பந்தமான வீடியோ படக்காட்சியும் இடம்பெற்றது.

(உ-129)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண வங்கி ஓய்வூதியர் நலன்புரிச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கன்னாதிட்டி மக்கள்வங்கிபிராந்திய அலுவலக அரங்கில்இடம் பெறவுள்ளது. (உ)

## மின்சாரம் வழங்க நடவடிக்கை

(ஏழாலை)

அளவெட்டி இக்கிராமனைப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (உ-12)

## கலந்துரையாடல்

(ஏழாலை)

வலி- தெற்கு பிரதேச சுகாதாரத் தொண்டர்களுக்கான கலந்துரையாடல் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை இணுவில் மத்திய கல்லூரியில் காலை 9.00மணிக்கு நடைபெறவுள்ளது. (உ-206)


சாமியே சரணம்

கோண்டாவில் கிழக்கு சந்தி, இருபாலை வீதியில் அமைந்துள்ள **18 படிகளுடன் கூடிய** அருள்மிகு

**சபரீச ஐயப்பன் ஆலய திருப்பணி**

**சபரீசன் அடியார்களே!**

நிகழும் விஷு ஹூ ஆவணி மீ 9-9-2001 ஞாயிற்றுக்கிழமை

அன்று புதிய ஐயப்பன் ஆலய கட்டிட நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்டு தற்போது வளர்ந்து வருகிறது. அடியார்கள் தங்களால் இயன்ற பண உதவி, சரீர உதவி, பொருள் உதவி போன்ற உதவிகளை செய்து ஆலயம் வளர்ச்சி அடைவதற்கு உதவி புரியும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

தற்போது பாலாலயத்தில் வீற்றிருக்கும் ஐயப்ப சுவாமிக்கு தினமும் காலை 8 மணிக்கு பூசை நடைபெறுகின்றது. ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் மாலை 5 மணிக்கு விஷேட பூசையும், ஐயப்பனின் பஜனை வழிபாடும் நடைபெறுகின்றது. இக்காலங்களில் அடியார்கள் வந்து தரிசித்து ஐயப்ப பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

ஐயன்தாள் வணங்கி நிற்கும்
யாழ். சபரீச சங்க பரிபாலன சபை

[2643]



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

**வெளிவாரிப் பரீட்சைகள்**

1. நுண்கலை மாணி (சங்கீதம்) - 1999
   1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் வருட பரீட்சைகள்
2. நுண்கலை மாணி (நாட்டியம்) - 1999
   1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் வருட பரீட்சைகள்

மேற்படி பரீட்சைகள் இவ் வருடம் நவம்பர் மாத முற்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்திலும் நடைபெறவுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 15/- இனைச் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டினை வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 15/- க்கான காசுக்கட்டளை/தபாற் கட்டளையை சுய முகவரியிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட நீள் தபால் உறையுடன் **உதவிப் பதிவாளர், வெளி வாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

பரீட்சார்த்திகளிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2001-10-30 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

பதிவாளர்

24-09-2001 [கி/2642]



**கண்ணீர் அஞ்சலி**

எமது நிறுவனத்தில் பணியாற்றும்
திரு. எஸ். உதயராஜா (பாபு)
அவர்களின் அன்பு மைத்துனர்

**முத்துலிங்கம் சதீஸ்குமார்**

(சந்நிதி முருகன் ஆட்டோச் சாரதி)

அவர்களின் அகால மரணத்தினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நியூ விதுஷா நகைமாடம்**
191 HK, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/2638)

## 17 வது திருத்தச் சட்டம் நிறைவேற்றம்
# தமிழ்க்கட்சிகள் வெளிநடப்புகுறித்து
# ஊடகத்துறைபிரதியமைச்சர்கவலை

(கொழும்பு)

17 வது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட போது தமிழ்க் கட்சிகள் வெளிநடப்பு செய்தமை கவலைக்குரிய விடயமாகுமென்று ஊடகத்துறை பிரதியமைச்சர் அலவிமௌலானா தெரிவித்துள்ளார்.

இச்சட்டம்நிறைவேற்றப்பட்டமை குறித்து அவர் விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது பற்றி மேலும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டதாவது;

ஐக்கியதேசியக்கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் முன்வைத்த கோரிக்கைகள் சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டமை போன்று. தமிழ்க்கட்சிகளும் புதிய யோசனைகளை முன்வைத்திருந்தால் தமிழ் மக்களுக்கு உபயோகமானதாக அமைந்திருக்கும்.

ஆனால் தமிழ்க் கட்சிகள் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விட்டுள்ளன;

அது மட்டுமன்றி, அரசாங்கம் முகம்கொடுத்துவந்துள்ள சவால்கள் சிலவற்றை இச்சட்டம் நிறைவேற்றப்பட்டமையால் நிவர்த்தி செய்யக்கூடியதாக உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்;

(உ-4)

## வலி.தெற்குபிரதேச சபையில் கண்டி ஏ-9 வீதியை திறக்கக்கோரி தீர்மானம்

(உடுவில்)

வடபகுதி மக்களின்போக்குவரத்துச் சிரமங்களைத் தவிர்ப்பதற்கும் கொழும்பு செல்லும் அவசர நோயாளர் நலன்கருதியும் யாழ். மக்களின் பொருளாதார நலன் கருதியும் ஏ-9 கண்டிவீதியைத் திறந்து தரை வழிப் போக்குவரத்துக்கு வழி ஏற்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு கோரும் தீர்மானம்ஒன்று அண்மையில் வலிதெற்கு பிரதேச சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தினை உடனடியாக ஜனாதிபதி சந்திரிகா மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் கவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் பிரதேசசபைத்தலைவர் க: கமலசேகரன் தெரிவித்தார்;

(உ-129)

## குடாநாட்டு விவசாயிகளுக்கு வழிகாட்டல் பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

விவசாய முயற்சிகள் மூலம் கூடிய விளைச்சலைப் பெற்றுக் கொள்வதற்கான வழிகாட்டலும் பயிற்சி வகுப்பும் விவசாயத் திணைக்களத்தினால் நடத்தப்பட்டு வருகின்றன.

யாழ் மாவட்டத்திலுள்ள விவசாயிகளால் பயிரிடப்படுகின்ற பல்வேறு பயிர்கள் சம்பந்தமான தொழில் நுட்ப அறிக்கை விருத்தி செய்வதற்கும் புதிய பயிர்ச்செய் முறைகளைக் கடைப்பிடிப்பதற்கும், அதன்மூலம் கூடிய உற்பத்திகளைப் பெறும் நோக்குடனும் யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்தினால் விவசாயிகளுக்கானவிவசாயப் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

இவ் குப்புக்கள்ஒவ்வொரு விவசாய போதனாசிரியர் பிரிவிலும், திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்திலும் நடைபெற்றுவருகின்றன.

மேற்படி பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்ற விரும்புவோர் தங்கள் பகுதி விவசாய போதனாசிரியரிடம் தமது பெயர் விபரங்களைப் பதிவு செய்து இப்பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ளலாம் என யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் ச. சின்னத்துரை அறிவித்துள்ளார்.

(உ-106-9)

## மூன்று மணிநேரத்தில் 166.6 மி. மி. மழைபதிவு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் 24 ஆம்திகதி திங்கட்கிழமை காலை 9 00 மணிவரையுள்ள 24 மணி நேரத்தில் 52.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிவரையான 24 மணிநேரத்தில் 216.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக திருநெல்வேலி வானிலை ஆராய்ச்சி நிலையபுள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் காலை 9.00 மணிமுதல் 12.00 மணி வரையுள்ள 3.00 மணிநேரத்தில் அதிகூடிய மழைவீழ்ச்சியாக166 6 மில்லி மீற்றர் பதிவாகியுள்ளது.

மேலும், பகல் இழிவு வெப்பநிலையாக22.8 பாகை செல்சியசும், உயர்வெப்ப நிலலயாக 29.5 பாகைசெல்சியசும் பதிவாகியுள்ளதாக வானிலை அவதானநிலைய தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர்ரி, பிரதீபன் தெரிவித்தார்;

(உ-106,9)

## கசிப்பு ஒழிப்பு தீவிரம்

(யாழ்ப்பாணம்)

அண்மைக் காலங்களில் யாழ். குடாநாட்டுப் பகுதியில் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

அதிகளவு கசிப்பு உற்பத்தகள் கண்டு பிடிக்கப்பட்டதனையடுத்து, கசிப்பு உற்பத்திப் பொருட்கள், அவற்றிற்குரிய உபகரணங்கள் கைப்பற்றி அழிக்கப்பட்டதுடன், கசிப்பு உற்பத்தியாளர்களுக்கு நீதிமன்றங்களில் தண்டனை விதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது; (செ-2)

## உண்டியல் திருட்டு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் டச்சுவீதியில் அமைந்துள்ள ஸ்ரீ வாலை இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய உண்டியல் அண்மையில் திருடப்பட்டுள்ளது;

கோவில் உரிமையாளர்கள் இரவில் உண்டியலை வீட்டிற்கு எடுத்துச் செல்வது வழக்கம்என்றும் சம்பவதினம் மறதியாக உண்டியலை எடுத்துச்செல்லவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது:

(செ-221)

## முதியோர்களுக்கு விருதுவழங்கி கௌரவிப்பு

சமூக சேவைத்திணைக்களம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச முதியோர் தினத்தை யொட்டி முதியோர்களுக்கு பாராட்டு விழா நடத்தபடடும் தினத்தில் அவர்களுக்கு விருது வழங்கி கௌரவிப்பதற்கும் சமூக சேவைத் திணைக்களம் முன் வந்துள்ளது.

இவ் விருதினை 90 வயதுக்கும் 100 வயதுக்கும் இடைப்பட்ட, நாட்டிற்கு பலவழிகளிலும் சேவையாற்றியவர்களுக்கே வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் பற்றிய விபரம் பிரதேச செயலர்கள் மூலம் வடக்கு - கிழக்கு மாகாண சமூக சேவைத் திணைக்களத்தினால் திரட்டப்பட்டுள்ளது;

(செ)

## உதைபந்தாட்டப் போட்டி தற்காலிக இடைநிறுத்தம்

(ஏழாலை)

தெல்லிப்பழைக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்டு வந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 ஆம் திகதி அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் நடைபெற்ற போட்டியில் மத்தியஸ்தரின் தீர்ப்பு பிழை எனக் கூறிய ஒரு பாடசாலை அணியின் ஆதரவாளர்கள் மைதானத்திற்குள் புகுந்து குழப்பம் விளைவித்தனர்.

இதனையடுத்தே இப்போட்டிகளை தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது;

(செ-12,237)

## படை நிலைகளில் இருந்து பளையை நோக்கி பல் குழல் தாக்குதல்

(வரணி)

எழுதுமட்டுவாள், உசன், மிருசுவில் பகுதிகளில் உள்ள படை நிலைகளை நோக்கி கடந்த சில தினங்களாக எறிகணை வீச்சு இடம்பெறுவதாகவும்.

இதற்குப் பதிலடியாக படையினர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பளைப்பகுதியை நோக்கி பல்குழல் பீரங்கித் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

இதனால் தென்மராட்சிப் பிரதேசம் குண்டுச் சத்தத்தினால் அதிர்வதாகவும், அங்கு மீளக்குடியமர்ந்த மக்கள் அச்ச நிலையுடன் வாழ்வதாகவும் கூறப்படுகிறது.

(உ-211)

## விளையாட்டுப் போட்டி

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் வடக்கு அம்மன் கோவிலடி சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறுவர்களின் விளையாட்டுப் போட்டி கடந்த ஞாயிறன்று கோகிலானந்தன் தலைமையில் நடைபெற்றது;

(உ-9)

## மீளக்குடியமர்வின் பின் அரியாலையின்நிலைபற்றிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மீளக்குடியேறியதன் பின் அரியாலை பிரதேசத்தின் இன்றைய நிலை தொடர்பான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் 30ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.00 மணிக்கு யா/சனசரத்தினம் ம.ம.வித்தியாலயத்தில் அரியாலை ஐக்கிய கழகத் தலைவர் சு.தி. கணநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அரியாலைப் பிரதேசத்தை உள்ளடக்கிய சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள், ஆலயங்களின் பிரதிநிதிகள், பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆர்வம் மிக்கவர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(உ)

## வளர்ப்பு பெற்றோர் திட்டம்

(துன்னாலை)

வளர்ப்புப் பெற்றோர் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 5 மாணவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்;

இவர்களுக்கான உதவு தொகை இம் மாதம் முதல் வைப்பிலிடப்படவுள்ளது;

(உ-4)

## திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் யாழ். வந்து சேர்ந்தனர்

(ஈச்சமோட்டை)

திருமலை, கொழும்பு ஆகிய இடங்களில் நடைபெற்ற தமிழ் விழா மற்றும் பல்வேறு கலை நிகழ்வுகளில் கலந்து கொள்ளச் சென்ற திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ். வந்து சேர்ந்தனர்;

கலைப்பயணம் மேற்கொண்டு வெளிமாவட்டங்களுக்கு சென்றிருந்த கலைஞர்களில் ஒரு தொகுதியினர் கடந்த 20ஆம் திகதி யாழ். வந்து சேர்ந்தனர்; (செ-59)

## மின் அஞ்சல் இணைப்பு

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்கு மின் அஞ்சல் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது;

இணையத்தளத்தின்மூலமாகவும் பிரதேசசபையின் வேலைத்திட்டங்கள், எதிர்காலத்திட்டமிடல்கள் மற்றும் செயற்பாடுகள் போன்றவற்றை இத்தளத்தின் ஊடாக எவரும் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும் என்றும் பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

[உ-232]

அன்பு மாணவர்களே!

**எதிர்வரும் 17-10-2001 அன்று**

**நவராத்திரி பூசை**

ஆரம்பமாவதையொட்டி

**'கவிதை மாலை'**

பகுதியை வலம்புரி வெளியிடவுள்ளது. மாணவர்களாகிய உங்களின் கவிதையும் இடம் பெற வேண்டுமாயின் நான்கு வரிகளுக்கு மேற்படாத கவிதைகளை ஆக்கி பாடசாலை, கற்கும் தரம் மாணவர் பெயர் ஆகிய விபரங்களுடன்

**"வலம்புரி"**

இல. 15, வெள்ளாந் தெரு,

யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்கவும்.

குறிப்பு: கவிதைகள் மாணவர்களின் சொந்த ஆக்கமாக இருப்பது அவசியம்.

(ஆ-ர்)

**சுகவாழ்வு**

பாதுகாப்பற்ற மேலெழுந்த வாரியான பாலியல் தொடர்புகளைத் தவிர்ப்பதன் மூலம் எய்ட்ஸ்/எச். ஐ. வி. தொற்று ஏற்படுவதைத் தடுக்கலாம்.

(எய்ட்ஸ்-வருமுன் காப்போம்)

தரிசனம்

## செய்தித் துளிகள்

### நீர்வேலியில் மதுவெறியர் அட்டகாசம்

(நீர்வேலி)

நீர்வேலிப் பகுதியில் மதுவெறியர்களின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது குறித்து அப்பகுதிப் பொதுமக்கள் மிகுந்த கவலை வெளியிட்டுள்ளனர்.

இவர்களின் நடமாட்டம் இரவு நேரங்களில் இடம்பெறுவதால் தமது நிம்மதியான நித்திரைக்குப் பங்கம் ஏற்படுவதாகவும்,

இது விடயம் தொடர்பாக பொது அமைப்புக்கள் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தனர். (உ-219)

### தபாலக கட்டடம் புனரமைப்பு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் பிரதமதபாலக கட்டடம் புனரமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாகசேதமடைந்திருந்த கட்டடம் இடித்து அகற்றப்பட்டதுடன் காணியைச்சுற்றிவரமுட்கம்பி வேலி அமைக்கப்படுகின்றது. (செ-223)

### கட்டாக்காலிகளால் பொதுமக்கள் அவதி

[யாழ்ப்பாணம்]

யாழ். இராமநாதன் வீதிப் பகுதியில் கால்நடைகளால் பொதுமக்கள் பெரிதும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

இக் கால்நடைகள் கைவிடப்பட்ட நிலையில் கட்டாக்காலிகளாகத் திரிகின்றன.

இவற்றினால் பெருமளவு வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (செ-19)

### செயலமர்வு இரு தினங்கள்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரப் பகுதி தொண்டர்களுக்கான அயடின் பற்றாக் குறையினால் ஏற்படும் தாக்கங்கள் பற்றிய செயலமர்வு ஒன்று யுனிசெவ் நிறுவனத்தினால் நேற்றும் இன்றும் நாவலர் கலாசார மண்டபத்தில் காலை 8.00 மணிமுதல் பிற்பகல் 4.45 வரை நடைபெற்று வருகின்றது.

மனிதரின் வளர்ச்சியில் அயடினின் முக்கியத்துவம், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், கட்டிளம் பருவத்தினர் ஆகியோருக்கு அயடினின் தேவை, மற்றும் சமுதாய மட்டத்தில் அயடின்ஏற்றிய உப்பைமுறைப்படிபாவித்தல் தொடர்பான விடயங்களில் இச்செயலமர்வு நடத்தப் படுகிறது. (உ-09, 106)

### அடிக்கல் நாட்டல்

(யாழ்ப்பாணம்)

யா/திருநெல்வேலி றோ.க. த.க பாடசாலையில் வகுப்பறைத் தொகுதி அமைப்பதற்கான அடிக்கல்நாட்டு வைபவம் 24ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது.

நண்பகல் 12.00 மணிக்கு இடம்பெற்ற இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச சபைத் தலைவரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்டப் பிரதிஅமைப்பாளருமான க.மணிபல்லவராஜன் அடிக்கல்லை நாட்டி வைத்தார். (உ-106)

### விளையாட்டு போட்டி

(மானிப்பாய்)

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் வளர்மதி சன சமூக நிலைய முன்பள்ளி விளையாட்டுப் போட்டி நிலைய வளாகத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வெ.அன்ரன்ஜோன்சன் கலந்து கொண்டார். [உ-232]

### பூஜை வழிபாடு இன்றி இந்து ஆலயங்கள்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறைப் பகுதியில் பல இந்து ஆலயங்கள் பூஜை வழிபாடுகள் எதுவுமின்றி மூடப்பட்டிருக்கின்றன.

கடந்த ஆண்டு வைகாசி மாதம் ஏற்பட்டஅசாதாரண சூழ்நிலைக்குப் பின் மூடப்பட்ட நிலையிலுள்ள மேற்படி ஆலயங்களில் சில சேதமடைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் கோவில், நெடுங்குளம் பிள்ளையார் கோவில், முத்துமாரியம்மன் கோவில் ஆகிய ஆலயங்களே இவ்வாறு மூடப்பட்டு பூஜை வழிபாடின்றி காணப்படுகின்றன. (செ-223)

### கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கிளைகளினதும் தலைவர், செயலாளர், பொருளாளர், யாழ். மாவட்ட நிர்வாகிகள் (தாய்ச் சங்கப்) பிரதிநிதிகள் ஆகியோர்க்கான கூட்டம் எதிர்வரும் 30ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணிக்கு யா/இந்துமகளிர் கல்லூரியில் வ. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது. (உ)

★ ✶

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கோப்பாய்க் கிளை அங்கத்தவர்களுக்கான கூட்டம் நாளை பி.ப.2.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. [உ-9]

### மயானம் திருத்தம்

(உடுவில்)

மிக நீண்ட காலமாக திருத்தம் செய்யப்படாதிருந்த கந்தரோடை சங்கம்புலவுமயானம், வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் 3 இலட்சம் நிதிமூலம் புனரமைக்கப்பட்டு வருகிறது. (உ-129)

### தையல் வகுப்பு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி மற்றும் பருத்தித்துறைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனங்களில் நாளை முற்பகல் 10 மணிக்கு தையல், தட்டச்சு வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. (உ-106)

### விதைப்பு ஆரம்பம்

(வரணி)

தற்போது குடா நாட்டில் பெய்து வரும் மழையை அடுத்து பெரும் போக நெற்செய்கைக்கான பணிகளை வரணிப் பகுதி விவசாயிகள் மேற் கொண்டு வருகின்றனர்.

எனினும், நெற்செய்கைக்கு வேண்டிய உள்ளீடுகளை தூர இடங்களில் இருந்தே எடுத்து வர வேண்டிய நிலையில் இப பகுதிக்கமக்காரர் மிகுந்த சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர். (உ-211)

# அரசியலமைப்பு நிர்ணய சபையை 5 ஆம் திகதிக்கு முன் நியமிக்கமுடியும்

## பொ. ஐ. மு. செயலாளர் நம்பிக்கை

(கொழும்பு)

17 வது திருத்தச் சட்டத்தில் இடம்பெற்றுள்ள அரசியலமைப்பு நிர்ணயசபை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் நிறுவப்படவேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கும் மக்கள் விடுதலை முன்னணிக்குமிடையில் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு ஏற்ப, இந்த கால எல்லைக்குள் அரசியல் அமைப்பு நிர்ணயசபை அமைக்கப்படவேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

இந்தச்சபையை நிறுவும் பொறுப்பு அரசாங்கத்தைச் சாரும் உத்தேச நிதி, அரசாங்கசேவை மற்றும் பொலிஸ் ஆணைக்குழு நியமிக்கும் பொறுப்பு அரசாங்கத்தை சார்ந்ததல்ல அது அரசியலமைப்பு நிர்ணய சபையை சார்ந்தது உத்தேச அரசியல் அமைப்பு அமைக்கப்பட்ட பின்னரே ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுமென்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் கருத்து தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணியின்செயலாளர்அமைச்சர் டி.எம். ஜயரத்தினா கருத்து தெரிவிக்கையில் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ள அரசியலமைப்பு நிர்ணயசபையை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் நியமிக்க முடியும் எனத் தெரிவித்தார். [உ-4]

## இராசிபலன்

27-9-2001
(புரட்டாதி 11 வியாழன்)
தசமி மு. ப-10.12
உத்தராடம் மு. ப-10.29
இராகுகாலம் 1.32-3.02
சுபநேரம் 7.32-9.02
சித்தம்

**மேடம்**
தொழில்சிறப்பு, மேன்மை, காரியநன்மை, கீர்த்தி.

**இடபம்**
தந்தைவழி உறவு, ஆன்றோர் மதிப்பு, புதியமுயற்சி, உடல்நலகுறைவு.

**மிதுனம்**
எதிர்பாராத பிரச்சினை, காரியதடங்கல், உடல் சோர்வு, போசனசுகம்.

**கடகம்**
நல்ல வரவேற்பு, தனவரவு, காரியநன்மை, வாகனவசதி,

**சிங்கம்**
லட்சுமிகரம், பகைவரால் நன்மை, தேகநலம், காரிய அனுகூலம்.

**கன்னி**
முயற்சி தாமதம், புத்திரரால் கவலை, தாழ்வுநிலை, வியாதி.

**துலாம்**
தன்னம்பிக்கை குறைவு, கல்விச்சிறப்பு, விரும்பாத உறவு, காரியதாமதம்.

**விருச்சிகம்**
நல்லசம்பவம், சகோதரர் உதவி, பொருள்சேர்க்கை, குடும்பசுகம்.

**தனுசு**
வியாதி, வாக்குக்கலகம், முயற்சிதாமதம், பொருள் விரையம்.

**மகரம்**
நல்லமுயற்சி, சயனசுகம், மனச்சஞ்சலம், நண்பர்உதவி.

**கும்பம்**
காரியதாமதம், சயனசுகக் குறைவு, தனவிரயம், இஸ்திரி பீடை.

**மீனம்**
குடும்பசுகம், காரிய நன்மை, தனலாபம், கௌரவம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## திறந்துவிடப்பட்ட வீதி மீண்டும் மூடப்பட்டது

### பாதுகாப்புக் கருதியாம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை வீதி தட்டாதெருச் சந்தியில் இருந்து அண்மையில் இராணுவத்தினரால் மக்கள் போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டிருந்த ஐயனார் வீதி மீண்டும் நேற்று முன்தினம் முதல் மூடப்பட்டுள்ளது.

தட்டாதெருச் சந்தியில் இருந்து செல்லும் ஐயனார் வீதி கடந்த 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் பொதுமக்களின் போக்குவரத்துக்காகத் திறந்துவிடப்பட்டது தெரிந்ததே.

இதேவேளை நேற்று தியாகி திலீபனின் 14 ஆவது நினைவு தினமாகையால் பாதுகாப்புக்கருதி இவ் வீதி தற்காலிகமாக மூடப்பட்டிருக்கலாம் என்று பரவலாகப் பேசப்பட்டது. (ம)

## தியாகி திலீபனின் நினைவு தினத்தை முன்னிட்டு சோதனைகள் தீவிரம்

[யாழ்ப்பாணம்]

தியாகி திலீபனின் நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று யாழ்.நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.

திலீபனின் 14வது நினைவு தினத்தை முன்னிட்டு படையினரால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

கொட்டும் மழையிலும் சோதனைச் சாவடியில் பொதுமக்கள் சோதனைக்குட்படுத்தப் பட்டனர்.

இதற்காக புதிய பல சோதனைச் சாவடிகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

பெருமளவு படையினர் தமது வாகனங்களில் நகரில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமையையும் அவதானிக்க முடிந்தது. (செ-19)

## சட்டமூலம் நிறைவேறியதை பாராட்டுகிறார் அனுரா

(கொழும்பு)

அரசியல்அமைப்பின் 17வது திருத்தச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையுடன்நிறைவேற்றப்பட்டதை சபாநாயகர் அனுராபண்டாரநாயக்கா உட்பட பல்வேறு அரசியல் கட்சித்தலைவர்களும்பாராட்டியுள்ளனர்.

17வது திருத்தசட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதினம்இலங்கையின் அரசியல்வரலாற்றில் முக்கியம் வாய்ந்ததொருதினமாகும் என்று சபாநாயகர் அனுரா தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் அமரதிஸ நாயக்கா கருத்துவெளியிடுகையில்.

அரசியல் யாப்பு சபையின் வெற்றியானது சுதந்திரமான அதன்செயற்பாட்டில் தங்கி உள்ளது, இதுதொடர்பாக பொதுமக்களும் செய்தி ஊடகங்களும் அரசியல்வாதிகளும் முக்கியபங்கு வகிக்கவேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அரசியல் அமைப்பின்17வது திருத்தச்சட்ட மூலத்தை அங்கீகரிப்பதில் சிரத்தை காட்டிய அரசாங்கத்தையும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியையும் பாராட்டினார். (வ)

## மின்னல் தாக்கி மீனவ இளைஞன் மரணம்

[ஆனைக்கோட்டை]

மின்னல் தாக்கியதில் மீன்பிடித் தொழிலாளி பலியான சம்பவம் நேற்று அதிகாலை 4.00 மணியளவில் காக்கை தீவு கடல் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

ஒரு வள்ளத்தில்தொழிலுக்குச் சென்ற 3 மீனவர்களை மின்னல் தாக்கியதில் இளம் குடும்பஸ்தரான சாவற்காடு ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தனபாலசிங்கம்ரங்கநாதன் [வயது 26] என்பவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

மற்றைய இருவரும் மயக்கமடைந்த நிலையில் சக மீனவர்களால் கரை சேர்க்கப்பட்டனர்.

இறந்தவரின் சடலம் மரண விசாரணையின் பொருட்டு யாழ். போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. [உ-104,232,102]

### செயலாளர்

[உடுவில்]

வலிதெற்கு பிரதேசசபை சுன்னாகம்உபஅலுவலகசெயலாளராக திருமதி யோகேஸ்வரி காசிலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். [உ-129]

### உதைபந்தாட்டம்

(அளவெட்டி)

வலிகாமம்வலய உடுவில் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை உதைபந்தாட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் கந்தரோடை ஸ்கந்தவரோதயக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. [உ-236]

## இன்று ஒரு தகவல்

# ஊடலும்,கூடலும்இன்பம்,

பூங்குழலி அவள் பெயர்! குழலின் இனிமை அவள் குரலில் இழைந்திருப்பதாலோ அல்லது பூவையவள் கருங்கூந்தல் மலர் இதழ் போல் மென்மையாக இருப்பதாலோ அல்லதுவேறு என்ன காரணத்தாலோ அவள் பெற்றோர்கள் அவளுக்கிட்டனர்! இரண்டு பத்தைத் தாண்டி ஓராண்டே ஆகியிருந்தது! நல்ல உடற் கட்டுக் கொண்டவள், அவள் நின்றால், ஆலய வாயில்களில் சிற்பிகளால் செதுக்கப்பட்டு போவோர் வருவோரின் சிந்தைகளில் ஆயிரமாயிரம் சிற்றின்பச் சுவைகளையூட்டும் சிலை போலிருக்கும். நடந்தால், நாட்டிய மேடை நோக்கி அரங்கேற்றத்திற்காக அச்சம், நாணங் கொண்டு தரையைப் பார்த்தவாறே ஏகும் ஏந்திழை போன்றிருக்கும்! அவள் சிரித்தால் வெள்ளித்தட்டில் தங்கக் காசுகளைக் கொட்டியது போன்றிருக்கும்! அவள் பார்த்தால், பால் சுவையூட்டிட அழைப்பது போலிருக்கும், 'மா' நிறங் கொண்ட மாதவள் நெஞ்சில் நீக்கமற நிறைந்தவன், அவள் தாய் மாமன் புலித்தேவன், வயதில் கால் நூற்றாண்டைக் கடந்தவன் என்றாலும் கடைந்தெடுத்தாற் போல் தடந்தோள் கொண்டவன், அவன் மனதில் பூங்குழலி தான் பூரண ஆதிக்கம் கொண்டிருந்தாள். இருவரும் விருப்பம் போல் இணைந்தனர் மணந்தனர்.

பூங்குழலி தன் கணவனிடம் அளவிலா ஆசைகொண்ட தன் விளைவு பொய்யான கோபத்தை வரவழைத்துக் கொண்டு சிணுங்குவதும், ஒதுங்குவதும், அவன் அது கண்டு அஞ்சி குழைவதும் வாடிக்கையாகி விட்டது. இல்வாழ்க்கையின் இலக்கணத்தை காலத்திடம் தான் இவர்களும் கற்றனர். அழகைச் சேர்க்கும் பருவம் ஆசைகளை வளர்க்கிறது! ஆசைகள் வளரும் போதே உடலில் சில ஏக்க உணர்வுகள், தோன்ற ஆரம்பித்து விடுகிறது. அந்த உணர்வுகளைத் தான் காதல் என்கின்றனர். இலக்கிய கர்த்தாக்கள் இத்தகைய காதலால் கட்டுண்டவர்கள் தான் புலித்தேவன் பூங்குழலி!

பூங்குழலியின் நெருங்கிய உறவினள் ... பாட்டி முறை வேண்டும். கரும்முடிகள் நிறம் மாறிக் கொண்டிருக்கும் வயதுடையவள். பூங்குழலி மீது அளவில்லாப் பற்று கொண்டவள்; பெயர் அல்லி. அல்லிப் பாட்டியென்று அனைவரும் அழைப்பர். அல்லிப் பாட்டி பூங்குழலியைச் சந்தித்தாள். அவளின் இல்வாழ்க்கையைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்பினாள். வயதானவர்களுக்கு இனி தாங்கள் பெறமுடியாத இன்பத்தை இளஞ்சிட்டுகள் பெற்று சுவைப்பதைக்கள்ளத்தனமாகக் காண்பதிலும் சிறுபிள்ளைத்தனம் போல்பேசி கேட்டுசுவைப்பதிலும் அலாதி சுவையிருக்கும் போலும்.

அல்லி பாட்டி வாய்வலை வீசினாள்: பாட்டி வீசும் வலையைப் புரிந்து கொண்டும் புரியாதவள் போல் நடித்தாள் பூங்குழலி. அடிக்கடி தனக்கும் தன் கணவனுக்கும் ஏற்படும் ஊடலைப் பற்றிக் கூறினாள். பாட்டி சுவையாகக் கேட்டுவிட்டுப்பொழுதை இப்படிப் பாழாக்கலாமா? என்றாள். 'என்ன பாட்டி செய்வது' என்று பாட்டியின் வாயைக் கிளறினாள் பூங்குழலி. சண்டைபோடுகிற நேரம் அவன் பிடியிலே மான் குட்டிபோல துள்ளிக் கொண்டிருக்கலாமல்லவா? என்றாள் பாட்டி. நீயும் தாத்தாவும் சண்டைபோட்டதேஇல்லையா என்றாள் பூங்குழலி.

'கணவன் மனைவியென்றால் சண்டைவராமலா இருக்கும். சண்டைஇல்லையென்றால் வாழ்க்கைதான் சுவைக்குமா?... ஊடலும் இருக்கவேண்டும். அதுதான் காதல் வாழ்வு முழுமையாக நிறைவேறப் பெறற பயன் என்றாள் பாட்டி. 'காதலை நன்றாகச் சுவைத்திருக்கிறாய் பாட்டி' என்று கூறி குறும்புத்தனமாகச் சிரித்தாள் பூங்குழலி. 'கள்ளி'... நீ மட்டும் என்ன? நீமறைத்தாலும் கன்னிப் போயிருக்கும் உன் கன்னங்கள் சாட்சி சொல்லுதடி' என்றாள் பாட்டி. தலையைக் குனிந்தவாறேதன் கன்னங்களைத் தடவினாள்! அப்போதுதான் கன்னத்தில் அவன் வைத்த முத்திரைகள் நினைவிற்கு வந்தன, அதைத்தடவும்போதும், அந்த நினைவுகள் வந்த போதும் ஏற்பட்ட சுகம் அவள்கண்களில் தெரிந்தது. வெட்கத்தால் எழுந்து ஓடிவிட்டாள். 'ஊடுதல், ஊடலை உணர்ந்து விடுதல், அதன்பின்கூடுதல்ஆகியஇவை காதல் வாழ்வு நிறைவேறப் பெற்றவர் பெற்றபயன்களாகும்' என்று அவள் நெஞ்சம் நினைத்தது. அதனைத் தான் வள்ளுவப்பெருந்தகை 'ஊடல் உணர்தல் புணர்தல் இவை காமம் கூடியார்பெற்ற பயன்' என்று எழுதி வைத்தார். □

ப. உ. சண்முகம்

### பாகிஸ்தானில் நடைபெறவுள்ள

# கிரிக்கெட் போட்டிக்கு இல. அணிக்கு அழைப்பு

(கொழும்பு)

பாகிஸ்தானில் இடம்பெற உள்ள ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் பங்கேற்க வருமாறு இலங்கை அணிக்கு விடுத்த அழைப்பை பரிசீலனை செய்து வருவதாக இலங்கைகிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைத் தலைவர் அறிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இலங்கை கிரிக்கெட் அணி பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தபோது அவற்றை தீர்க்க பாகிஸ்தான், இந்தியா என்பன தமது ஒத்துழைப்பை வழங்கியிருந்தன.

இதனால் தற்போதுபாகிஸ்தான் முகம்கொடுத்துள்ள நெருக்கடியிலிருந்து விடுபட இலங்கை ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேற்படி ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்கவிருந்த நியூசிலாந்து அணி, தற்போதைய அமெரிக்கப் பிரச்சினையால் பாகிஸ்தானில் ஏற்பட்டுவரும் பாதுகாப்பற்ற சூழலைக் கருத்தில்கொண்டு பின்னர் மறுத்ததால்,

பாகிஸ்தான்கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபைக்கு 40மில்லியன் டொலர் நட்டம் ஏற்படும் நிலையைத் தவிர்க்கும் முகமாகவே இலங்கைக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-2)

# தொண்டராசிரியர் தெரிவில் அநீதி

# பாதிக்கப்பட்ட பலர் புகார்

## ஸ்ரீல. சு. க. வட்டாரங்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தற்போது வெளியாகியுள்ள தொண்டர்ஆசிரியர் தெரிவுப் பட்டியலில் பல்வேறு குளறுபடிகள் இடம்பெற்றிருப்பதாக, பாதிக்கப்பட்ட பலர் தம்மிடம் புகார்செய்து வருவதாக யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

அரச உத்தியோகம் வகிக்கின்றவர்களின் பெயர்கள் இப்பட்டியலில் இடம்பெற்றிருப்பதுடன், சேவைக்காலம் கூடுதலாகவுள்ள பலரது பெயர்கள் விடுபட்டுள்ளதுடன், புதியவர்கள் அனேகரது பெயர்கள் இப்பட்டியலில் இணைக்கப்பட்டிருப்பதாக பாதிக்கப்பட்டவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுவிடயம் தொடர்பாக வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர், வடக்கு-கிழக்கு மாகாண கல்விச்செயலாளர் மற்றும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஆகியோரின் கவனத்தின்கீழ் கொண்டு வந்திருப்பதாகவும்,

இதுவிடயத்தில் நீதியான முடிவு விரைவில் கிடைக்கும் எனவும் யாழ் மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இணைச்செயலாளர் ரி. தேவகுலநாயகம் தெரிவித்தார். (உ-104)

## கட்டாயக் கல்வி விழிப்பு நிகழ்வு

(மூளாய்)

கட்டாயக் கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வுகள் கடந்த வெள்ளியன்று யா/மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் இடம்பெற்றன. (உ-212)

## உபதபாலகம் இடமாற்றம்

(கொழும்புத்துறை)

அரியாலை மாம்பழம் சந்திப்பகுதியில் இயங்கி வந்த உபதபாலகம் தற்போது கச்சேரி நல்லூர் வீதியில் இயங்கி வருகின்றது.

கடந்த ஆண்டு ஏற்பட்ட அசாதாரணநிலையினால் குறித்த உபதபாலகம் இவ்விடத்திற்கு மாற்றப்பட்டு இயங்கி வருகின்றது. (உ-223)

## பரிசில்வழங்கல்

(துன்னாலை)

சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை ஒட்டி பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்பட்ட கவிதை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்வழங்கல் எதிர்வரும் 5 ஆம் திகதி பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது. (உ-41)

## மழையினால் சிரமம்

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை சாவல்காட்டுச் சந்தைப் புனரமைப்புப்பணிகள் இடம்பெறுகின்றமையினால், புதியஇடத்தில் இயங்கும் தற்காலிக சந்தைப் பகுதியில் மழை வெள்ளம் தேங்கி நின்றதையடுத்து நேற்று முன்தினம் சந்தைப் பணிகள் தடைப்பட்டதை அவதானிக்க முடிந்தது. (உ-201)

## ஞானச் சுடர் மாத இதழ் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையினரால் மாதாந்தம் வெளியிடப்படும் ''ஞானச் சுடர்'' புரட்டாதி மாத இதழ் நாளை வெள்ளிக்கிழமை மு. ப. 10.30மணிக்கு சந்நிதியான் மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது.

இந்நூலின் வெளியீட்டுரையை லயன் கே. செல்வரட்ணமும், மதிப்புரையை சமூகஜோதி கா. கணேசதாசனும் நிகழ்த்தவுள்ளனர். (செ)

# உதைபந்தாட்டம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டமட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று முதல் எதிர்வரும் 3 ஆம்திகதிவரை நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் யாழ். இந்துக் கல்லூரியிலும், யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன

இன்று இடம்பெறவுள்ள போட்டிகள் விபரம் வருமாறு;

காலை 8.30 மணிக்கு 18 வயதுப் பிரிவில்; யாழ். இந்துக் கல்லூரி எதிர் யாழ் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயமும், கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் யாழ். பெரியபுலம் ம. வித்தியாலயமும் மோதவுள்ளன.

பிற்பகல் 2 30 மணிக்கு 16 வயதுப் பிரிவில் யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயம் எதிர் யாழ் கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலயமும் 18 வயதுப்பிரிவில்: யாழ். கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் எதிர் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயமும் மோதவுள்ளன.

இன்றைய போட்டிகள் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. (உ-106)

# வீடொன்றிலிருந்து 10கிலோடைனமைற் மீட்பு

## திருமலையில் சம்பவம்

(மட்டகளப்பு)

திருகோணமலை உப்புவெளி சிறிமாபுரபகுதியில் வீடொன்றிலிருந்து 10 கிலோகிராம் டைனமைற் வெடிபொருளை உப்பு வெளிப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

வீட்டின் பெட்டகம் ஒன்றினுள் இவ்வெடிபொருள் இருந்ததாகவும் இதுதொடர்பாக பெண் ஒருவரை தாம் கைது செய்ததாகவும் உப்பு வெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ-4)

# உள்ளூர் விதை உற்பத்திக்கு 15 இலட்சம் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளின் நன்மை கருதி உள்ளூரில் விதைகளை உற்பத்தி செய்வதற்காக பதினைந்து இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

உள்ளூரில் விதைகளை உற்பத்தி செய்வதற்காக யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கத்திற்கு இந் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இச்சங்கத்தினர் தரமான மரக்கறி விதைகளை உள்ளூரில் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளதுடன், விதைகளைப் பெறும் நோக்கிலான விவசாயப் பண்ணையை அமைத்து விதை உற்பத்தியை பெருக்கும் முயற்சியிலும் ஈடுபடடிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# காணி உத்தியோகத்தர்களாக பணிபுரிவோர்க்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள பிரதேச செயலகப் பிரிவுகளில் 5 வருடங்களுக்கு மேலாக பணியாற்றும் காணி உத்தியோகத்தர், குடியேற்ற உத்தியோகத்தர்கள், வெளிக்களப் போதனாசிரியர்கள் ஆகியோர் எதிர்வரும் 2002 ஆம் ஆண்டு முதல் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இவர்களுக்கான இடமாற்ற விண்ணப்பங்கள் வடக்கு-கிழக்கு மாகாண காணி நிர்வாகத் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன.

இது சம்பந்தமான சுற்று நிருபமொன்று சகல பிரதேச செயலாளர்களுக்கும் மேற்படி அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (உ)

## சிந்தனைக்கு விருந்து

### அண்டாதீர் அனனவர் போல் ஆள்

அண்ணனுக்காய்ச் சாவை அரவணைத்தான்
கும்பகன்னன்
மண்ணிற் புகழுடலில் வாழ்கின்றான் -- மண்டுவசை
கொண்டனரே காக்கைவன்னி கோழையாம்
எட்டப்பன்
அண்டாதீர் அன்னவர்போல் ஆள்.

'பழையவன்'

# இந்தியப்பாதுகாப்புக்கும்அச்சுறுத்தல்
# எந்நேரமும் யுத்தம் வெடிக்கலாம்
## பிரதமர் வாஜ்பாய் பொது மக்களுக்கு எச்சரிக்கை

[புதுடில்லி]
ஆப்கானிஸ்தானுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள வாஷிங்டன் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளுமிடத்து தமது பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் நிலவும் என்பதால் மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறு இந்தியப் பிரதமர் அடல்பிகாரி வாஜ்யாய் நாட்டு மக்களைக் கோரியுள்ளார்.

மதுரையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே பிரதமர் வாஜ்பாய் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரை நிகழ்த்துகையில்,

உலகில் பாரிய நெருக்கடி நிலவி வருவதாகவும் எந்த இடத்திலும் எப்போதும் யுத்தம் இடம் பெறலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதிகள் எங்கு எப்போது தாக்குதல்நடத்துவார்கள் என்பது தெரியவராத போதிலும் அனைத்து நாட்டு மக்களும் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் இக் கூட்டத்தில் எச்சரித்துள்ளார்.

இதேவேளை அமெரிக்காமீது தாக்குதல் நடத்தியது பின்லேடனே என அமெரிக்கா திடமாக கூறியதன் பின்னர் இந்தியா முழுவதும் பெரும் பதட்டம் நிலவிவருவதும் குறிப்பிடத்தக்கது

(து-7)

# தலிபானுடனான தொடர்பை
# சவுதி அரசு துண்டித்தது

(றியாத்)
சவுதி அரேபியா தலிபான் இயக்கத்துடனான சகல உறவுகளையும் துண்டித்துக் கொண்டது.

தலிபான் இயக்கம் பயங்கர வாதிகளுக்கு புகலிடம் கொடுத்து வருவதாகவும் பயங்கரவாதத்தை வளர்ப்பதற்கு உதவி வருவதாகவும் ஆதார பூர்வமாகக் கிடைத்த தகவல்களைக் கொண்டு சவுதிஅரேபியா சகலதொடர்புகளையும் துண்டித்துக் கொண்டது.

தாலிபான் படையினர் சவுதியுட்பட பல நாடுகளிலுமுள்ள பயங்கரவாதிகளுக்குப் பயிற்சி கொடுத்து உலக பயங்கர வாதத்தை வளர்ப்பதாலும் இஸ்லாமிற்கு எதிரான பிரசாரங்களில் ஈடுபடுவதாலும், தலிபான் இயக்கத்துடன் தொடர்புகளை நீக்கியுள்ளது.

இருந்த போதிலும் ஆப்கானிஸ்தானுக்கு மனிதநேய உதவிகளை என்றும் சவுதி அரேபியா வழங்குமென்றும் அரண்மனைக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது. (து)

# அஸாமில் குண்டு வெடிப்பு
# பெருமளவினர் படுகாயம்
## தீவிரவாதிகளின்வேலையாம்

(புதுடில்லி)
இந்தியாவின் அஸாம் மாநிலத்தின் ரயில் நிலையம் ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 100 இற்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

தீவிரவாதக்குழுஒன்றினால் எடுத்து வரப்பட்ட பொதி ஒன்றிலேயே இக் குண்டு வைக்கப் பட்டுள்ளதாகவும், குண்டினை கொண்டுவந்த தீவிரவாதிகள் மூவரும் தப்பிச் சென்றிருப்பதாகவும் நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-7)

## விமானத்தில் குண்டுப்புரளி
# அநாமதேய தகவலால்
# இடையில் தரையிறக்கம்

(நைரோபி)
கென்யா பயணிகள் விமான சேவையின் விமானம் ஒன்று இடை நடுவில் தரையிறக்கப்பட்டுள்ளது.

கே கியூ. 482 என்ற மேற்படி விமான நிலையத்தில் 63 பயணிகளுடன் நைரோபி விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட சில மணி நேரத்துள் அனுள் குண்டு வைக்கப்பட்டுள்ளதென கிடைத்த அநாமதேய தொலைபேசி தகவலினை அடுத்து அதே விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

உடனே பயணிகள் அனைவரையும் அவசரஅவசரமாக வெளியேற்றி வெடி குண்டு ஆய்வாளர்கள் விமானத்தை தீவிரமாக பரிசோதித்தனர்.

ஆனால்விமானத்தில்குண்டு இல்லை என்றும், அது வதந்தி என்பதும் புலப்பட விமானம் மீண்டும் பயணத்தில் ஈடுபட பணிக்கப்பப்பட்டதாக அங்கிருந்து வெளிவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ-7)

## செய்திப்பரல்

★ அமெரிக்காவிலுள்ள சீக்கியர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படுமென்று அமெரிக்க ஜனாதிபதி புஷ் உறுதியளித்துள்ளார்.

★ ஐக்கிய அராபிய எமிரேட்ஸ் நாடு தலிபான் அரசாங்கத்துடனான உறவை முறித்துள்ளது.

★ கொலம்பிய - பாக் கிளர்ச்சிக்காரர்களால் சிறைப்பிடிக்கப்பட்டிருந்த மூன்று ஜேர்மன் நிவாரண ஊழியர்களில் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார்.

★ தாய்வானில் ஏற்பட்ட சூறாவளியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 85ஆக அதிகரித்துள்ளது. (உ- 3)

## பயங்கரவாதத்திற்கு எதிரான
# அமெ.நடவடிக்கைகளுக்கு
# சிங்கப்பூர் ஒத்துழைக்கும்

(சிங்கப்பூர்)
பயங்கரவாதத்திற்கு நிதி சேகரிக்கும் திட்டத்தினை ஒழிக்க அமெரிக்காவுடன் ஒத்துழைக்க சிங்கப்பூர் முன்வந்துள்ளது.

பயங்கரவாதத்திற்கு உதவுவதைத் தடுக்குமாறுபல்வேறு நாடுகளையும் அமெரிக்கா கேட்டுள்ளதை புரிந்துகொண்டுள்ளதாகவும் சிங்கப்பூர் தெரிவித்துள்ளது.

மேலும் இதுவிடயம் தொடர்பாக தமது நாட்டையும்அமெரிக்கா அணுகுமென்று தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் தமது நாட்டுச் சட்டதிட்டங்களுக்கு அமைய அமெரிக்காவுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க எப்போதும்தயாரெனவும் சிங்கப்பூர் தெரிவித்துள்ளது.

வாஷிங்டன் மற்றும் நியூயோர்க் மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து, 27 தீவிரவாத அமைப்புக்கள் மற்றும் தனிப்பட்டவர்களின் சொத்துக்களை முடக்கும் வகையில் அமெரிக்கா அவற்றின் பெயர் மற்றும் விபரங்களை வெளியிட்டுள்ளதுக் குறிப்பிடத்தக்கது.

(உ-7)

## பெண்களை
# இம்சைப்படுத்தியவருக்கு
# 224 வருட சிறைத்தண்டனை

(மெக்ஸிக்கோ)
மெக்ஸிக்கோவில் இரு பெண்களைக் கடத்தி, பாலியல் வல்லுறவிற்குட்படுத்தியதாகச் சந்தேகிக்கப்பட்ட நபர் ஒருவர்தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்கு மெக்ஸிக்கோ நீதிமன்றம் 224 வருட சிறைத் தண்டனையை விதித்துள்ளது.

டேவிட் பக்காரே (வயது 61) என்பவருக்கேஇவ்வாறுசிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (உ-2)

## அமெ. மீது தாக்கு
# சந்தேகத்தின் பேரில்
# பிரிட்டனில் மூவர் கைது

[லண்டன்]
நியூயோர்க் மற்றும் வாஷிங்டன் மீதான தற்கொலைதாரிகளுடன் தொடர்புள்ளவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில், பிரிட்டனில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களைத் தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்யும் நீதிமன்ற உத்தரவை பிரிட்டிஷ் பொலிஸார் பெற்றுள்ளனர்.

ஸ்கொட்லாண்ட் யார்ட் பொலிஸார் இது தொடர்பாக நான்கு பேரைக் கைது செய்ததாகவும், எனினும் 29 வயது நபர் ஒருவரை பின்னர் விடுவித்ததாகவும் எஞ்சிய மூவருமே தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்கப்படுவதாகவும் தெரிய வந்துள்ளது.

மேலும் விசாரணைகள் தொடரும் வகையில், மூன்று பேரையும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கும் உத்தரவையும் நீதிமன்றம் வழங்கியுள்ளது. (உ-2)

## மத்திய கிழக்கிற்கான
# விமான சேவைகளை
# சீனா இடைநிறுத்தியது

மத்திய கிழக்கு நாடுகளுக்கான விமான சேவைகள் சிலவற்றை இடை நிறுத்தியுள்ளதாக சீனா அறிவித்துள்ளது.

வாஷிங்டன் நியூயோர்க் நகரங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க அமெரிக்கா தயாராகி வருகின்ற சூழ்நிலை காரணமாகவே இந்த இடை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சீன விமானநிலையப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (உ-4)

# பின்லேடனை ஒப்படைக்கத்தவறின்
# பின்விளைவுகளை ஏற்கவேண்டும்
## தலிபான் அரசுக்கு பிரி.பிரதமரும் எச்சரிக்கை

[லண்டன்]
ஒஸாமா பின்லேடனையும் ஆப்கானிலிருக்கும் பயங்கரவாதக் குழுக்களையும் ஒப்படைக்காவிட்டால்இராணுவ நடவடிக்கையை எதிர் கொள்வதைத் தவிர தலிபானுக்கு வேறுவழியில்லையென்றுபிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தனது உத்தியோக பூர்வவாசஸ்தலத்திலிருந்து உரை நிகழ்த்திய பிளேயர், எமதுஎதிரியின் நண்பன் எங்களுக்கும் எதிரி என்று தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்கையில்; ஆப்கான் மக்களுக்கு எதிராகப் போர் நடவடிக்கைகள் தொடுக்கப்படமாட்டாதென்றும், தலிபான் இயக்க அரசிற்கு எதிராகவும் பின்லேடனுக்கு எதிராகவும் போர் தொடுக்கப் படும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளைதலிபான்ஆட்சியாளர்களுக்கு என்ன செய்ய வேண்டும என்பது நன்றாகத் தெரியுமென்றும் அதற்குஇசைவாகஅதுநடககும் என்றுஎதிர்பார்ப்பதாகவும் பிளேயர் மேலும் தெரிவித்தார். (து)

## உலக தரிசனம்

# விமானப் பாதுகாப்பை
# மேலும் பலப்படுத்துக
## புஷ்ஷுக்கு அழுத்தம்

(வாஷிங்டன்)
விமானப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்துமாறு அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுக்கு அழுத்தங்கள் அதிகரித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரபல விமான சங்கமொன்று, தமது உறவினர்களுக்கு, பாதுகாப்பின் பொருட்டு ஆயுதங்கள் வழங்க வேண்டுமென்று கோரிக்கைகள் விடுத்துள்ளது.

இக் கோரிக்கையைத் தொடர்ந்து விமான நிலையப் பாதுகாப்பு தொடர்பாக அடுத்தவாரம் அமெரிக்க நாடாளுமன்றல் கலந்துரையாட இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, விமானம் ஒன்றில் இரண்டு விசேட துப்பாக்கிகளையும் தரமான உபகரணங்களையும் நிலையாக வைத்திருப்பது தொடர்பாக ஆலோசனை இடம் பெற்று வருவதும் தெரிய வருகிறது. (உ-7)

# விமானமூலம் விஷக்கிருமிதாக்குதல்
# இடம்பெறும் சாத்தியம் அதிகரிப்பு
## உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

அமெரிக்காவில் இடம்பெற்ற தாக்குதல்களைத் தொடர்ந்து விஷக் கிருமிக் குண்டுத் தாக்குதல் இடம்பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இன்னும்இருப்பதால் அவற்றுக்கெதிரான சகல பாதுகாப்புக்களையும் உலக நாடுகள் தீவிரப்படுத்திக் கொள்ள வேண்டுமென உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால் ஏற்படும் எந்த ஒரு நோயையும் இனங்காண அதற்கெதிரான சிறந்த சுகாதாரத் திட்டம் தேவை என்று உலக சுகாதார நிறுவன தொடர்புத்துறை இயக்குநர் டேவிட் ஹீமன் தெரிவித்துள்ளார்.

இந்த அச்சுறுத்தல் காரணமாக பயிர்களுகு இரசாயன உரம், மற்றும் கிருமிநாசினிகளை விமானம் மூலம் விசிறி வரும் விமானங்களையும் அமெரிக்கா தடைசெய்துள்ளது. (உ-7)

தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின் அல்லது.
-குறள்

## வலம்புரி

### ஆப்கான் தாக்கினால்?

ஆப்கான் மீது அமெரிக்கா மேற்கொள்ளவுள்ள தாக்குதல்களுக்கு, திருமலைத் துறைமுகத்தை பயன்படுத்த இலங்கை அரசு அனுமதி அளித்த செய்தி படைத்தரப்பு ஊடாகக் கசியத்தொடங்கியுள்ளது. அமெரிக்க நகரங்கள் மீதுநடத்தப்பட்ட விமானத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை ஒஸாமா பின்லேடனே நடத்தியுள்ளார் என்ற ஊகத்தின் அடிப்படையில் அவர் மறைந்து வாழும் ஆப்கான் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

அமெரிக்க நகரங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் சூத்திரதாரி யார் என வெளிப்படையாகக் கண்டறிய முடியாத நிலையில் ஆப்கான் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா எடுக்கும் நடவடிக்கைகள் எந்தளவு தூரம் நியாயமானதென்பது, வாதத்துக்குரிய விடயமாகும்.

அதேபோல் அமெரிக்கா மீதான தாக்குதலில் பொதுமக்கள் கொல்லப்பட்டது பயங்கரவாதம் என ஏற்றுக்கொண்டால் அமெரிக்கா ஆப்கான் மீது தாக்குதல் நடத்தும் போது பொதுமக்கள் கொல்லப்படும் பயங்கரம் இடம்பெற வாய்ப்புண்டு.

இத்தகைய அழிவுகளை தடுக்க முன்வர வேண்டிய உலக நாடுகள்பல அதனை மறந்து ஏதோ அமெரிக்காவுக்கு உதவுவதன் மூலம் தனக்கும் பெருமையெனக் கருதிக்கொண்டு செயற் படுகின்றன.

இதில் சிரிப்பு என்னவெனில் இலங்கை அரசு திருமலைத் துறைமுகத்தை அமெரிக்கா பயன்படுத்துவதற்கு அனுமதியளித்துள்ளது.

அமெரிக்காவுக்கு உதவும் நாடுகளைத் தாக்கப் போவதாக தலிபான் அறிவித்துள்ள இவ்வேளையில் ஆயுதப் படைப் பலத்தால் மிகப் பலயீனமான இலங்கை நமக்கேன் தொந்தரவு என்றிராமல் இந்து மாசமுத்திரத்தில் நானும் இருக்கிறேன் எனக்காட்ட நினைப்பது மிகவும் தவறு

ஏனெனில் அமெரிக்காவுக்கு ஆதரவளிக்கின்ற பிரிட்டன், இந்தியா பாகிஸ்தான் போன்ற நாடுகள் ஆப்கானின் எதிர்த் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கக் கூடியவை. ஆனால் இலங்கையோ யுத்தவிமானம் இரைஞ்சாலே போதும் கூரைகள் நிலம் நோக்கும் அப்படியானால் இலங்கையைத் தாக்குவதில் ஆப்கானுக்கு கடினம் இருக்க முடியாதென்பதை ஒரு கணம் சிந்தித்தால் போதுமானதாகும்.

(இன்று சீரடி சாயிபாபா பிறந்த தினம்)

# ‘ஒன்றேஇறை’ என்ற உண்மையை உணர்த்தி

# ஆன்ம நேயத்தை வளர்த்த “சீரடி சாயிபாபா”

**ம. சிவயோகசுந்தரம்**
(நல்லூர்)

சீரடிசாயி, சத்தியசாயி, இனிவரும் பிரேமசாயி ஆகிய அவதாரங்கள் சரீரத்தினால் வேறானாலும் தெய்வத்துவம் ஒன்றே. முதல் அவதாரமான சீரடிசாயி தெய்வத்துவத்தை வெளிப்படுத்தவும், இப்போது எம்முன் காட்சி கொடுத்து ஆட்கொள்ளும் சத்தியசாயி அவதாரம் தெய்வத்துவத்தை பிறருக்கு அளிக்கவும், அவதாரம் எடுக்கப் பட்டன. இனி வரப்போகும் பிரேமசாயி அவதாரம் தெய்வத்துவத்தை செய்வதற்கு அவதாரம் எடுக்கப்படுமென பகவான் சத்தியசாயிபாபா தமது தெய்வீக அருளுரையில் தெரிவித்துள்ளார்.

### பிறப்பும், வளர்ப்பும்

சீரடிசாயி அவதாரத்தைப் பற்றி 28-12-1990 அன்று பகவான் சத்தியசாயி பாபாவே தசரா உற்சவ நிகழ்வு ஒன்றின் போது பின் வருமாறு அருளியுள்ளார். நிஜாம் இராஜ்யத்தில் நகரத்தின் நாகரிக வாழ்க்கையைப் பற்றி அறிந்திராத மக்கள் வாழும் பத்ரி என்ற குக்கிராமத்தில், கங்காபவத்யா- தேவகிரிஅம்மா என்ற தம்பதியருக்கு 1835ம் ஆண்டு செப்ரெம்பர் 28ல் சீரடிசாயிபாபா என்னும் சற்புத்திரன் அவதரித்தான்.

கங்காபவத்யாவிற்கு துறவு வைராக்கியம் முற்றியநிலையில் தாம் பெற்ற குழந்தையைக் கூட திரும்பிப் பார்க்காது செல்ல அவரது பத்தினியாரும். ஆரண்யவாசம் மேற்கொளள கானகம் சென்றனர். தனித்து விடப்பட்ட குழந்தையை சூபி என்ற இஸ்லாமியப் பிரிவைச் சேர்ந்த முஸ்லிம் தம்பதியினர் எடுத்து 4வயது வரை வளர்த்தனர். இவரை வளர்த்த முகம்மதியர் அப்போது இறக்க அவரது மனைவியால் இப்பிள்ளை வளர்க்கப்பட்டது. இந்து, முஸ்லிம் மோதல்கள் அதிகமாக நடந்த அக்காலத்தில் இக்குழந்தை இந்துக் கோயிலுக்குச் சென்று ''நானே அல்லா'' என்றும் மசூதியில் ''இராமனும் கிருஷ்ணனும் தெய்வங்கள்'' எனப்பாடியும் ''சிவனே அல்லா'' என்று கர்ச்சித்துக் கொண்டும் திரிவான். இதனால் இரு தரப்பினரதும் கோபத்துக்கு ஆளாகினான்.

### சீரடிக்கு வருகை

அவனை ''வெங்கூசா'' என்ற இந்து மகானின் ஆச்சிரமத்தில் சேர்த்தார் வளர்ப்புத்தாய். ‘வெங்கூசா’ எல்லாவற்றிலும் இந்தச் சிறுவனுக்கே முதலிடம் கொடுத்தார். இதனால் அங்கு இருந்தவர்களின் கோபத்திற்கு ஆளாக ஒரு நாள் நள்ளிரவு அவ்விடத்தை விட்டகன்று சீரடியை வந்தடைந்தார், அங்கு இரு மாதங்களே தங்கிய பின் ஊர் ஊராக பக்கிரி வேடத்தில் சுற்றித் திரிந்தார். இறுதியில் துர்த்ரகடா எனும் சிற்றூரை அடைந்து அங்கிருந்து சாந்து பாய்ப்பட்டேல் குழுவினருடன் திருமண மொன்றிற்காக மீண்டும் சீரடியை வந்தடைந்தார். அன்றிலிருந்து சுமார் 60 வருடங்களாக சீரடியை தமது இருப்பிடமாக அமைத்தார்.

அக் காலத்தில் பம்பாய் மாநில அரசில் கலெக்டராக பணிபுரிந்த எச். வி. ஹரி வினாயக தானே என்பவர் தம் மனைவியை இழந்து தவித்து தமது நண்பர் டாக்டர் டீ. ஜி. தானே மூலமாக பாபாவின் புகழை அறிந்து தரிசிக்கச் சென்றார். பல சமயங்களில் தானேயைப் பார்த்து சிரிப்பதும் கைகளை ஒரு மாதிரியாக அசைத்துக் கொண்டு இருந்தார் பாபா.

இதனால் பாபா ஒரு விசரனாக இருப்பாரோ என்று தானே சந்தேகப்பட்டார். இவரது பெயரைக் கூட இவரது நண்பர் பாபாவிடம் கூறவில்லை. இதனைப் புரிந்து கொண்ட பாபா ''சாந்தே நீ எதற்கு கவலைப்படுகிறாய் தேகத்தின் மீது இப்படிப் பட்ட பாசத்தை வைப்பது ஏன்? அது அழியக் கூடியதல்லவா? கவலைகள் எல்லோருக்கும் ஏற்படுவது சகஜமே, ஆனால் அவைகள் ஓடும் மேகங்கள் போன்றவை. தைரியமாக இருந்து உன் குழந்தையைக் காப்பாற்று'' என்று கூறினார்.

### சாத்தேவாடா விடுதி

இவருடையநண்பருக்குகூட இவருடைய மனைவி ஒரு மகளை ஈன்றுவிட்டுமாண்டாரென்ற உண்மை தெரியாது. இதனால் பாபா ஒரு ‘திரிகால ஞானி’ நடந்ததையும், நடப்பதையும் இனிநடக்கப்போவதையும், நன்கறிவாரென உணர்ந்தார்தானே. இதனால் பாபாவிடம் சரணடைந்து ‘சாத்தே வாடா’ என்றதங்கு விடுதியை சாயி பக்தர்கள் சீரடியில் தங்குவதற்குத்தானே கட்டுவித்தார். முதலில்பாபா சாத்தேயைநோக்கி ‘சீரடிக்கு கோட்டைகட்டுஎனப்பணிக்க அவர் இவ்வளவு பெரியகட்டடத்தைக் கட்ட நான் ஒரு லட்சாதிபதி இல்லைச் சுவாமி என்றதும் உடனே பாபா ‘யாமிருக்கப் பயமேன்’ என்றார். இதைக் கேட்டசாத்தே மிகத் துணிச்சலாக செயற்பட்டு பாபாவின் அவதாரப் பணியில் முதன்மையானகருவியாக விளங்கினார்.

சீரடி பாபா ஏறக்குறைய ஐந்தரை அடி உயரத்துடனும் தங்கத்தைப் போன்று பளபளப்பான மேனியராகவும், நீல நிறக்கண்கள் உள்ளவராகவும் திகழ்ந்தார். அவை இருளில் கூட ஒளிரும். பாபா எப்பொழுதும்முரட்டு வெள்ளைத் துணியிலான உடைகளையே அணிந்தார். அவர் தலையைச்சுற்றி எதற்காக துணியைக் கட்டிக் கொண்டார் என்று அவர் கூறியதில்லை.

அவர்குளிக்கும்போதுஉடல் அவயங்களைவெளியில் எடுத்துக் காயவிட்டுக்குளிப்பதைப் பார்த்த அவ்வூர் மக்கள்இவர் பக்கிரியல்ல பெரிய மகான் என்பதை உணர்ந்தனர் அவர் எங்கும் நிறைந்தவராகவும் எல்லாம், அறிபவராகவும் திகழ்ந்தார்.

### இறைவனின் அடிமை

சீரடி பாபாயாரென சாதாரண மக்களால் புரிந்து கொள்ள முடியவில்லை அவரது பக்தர்கள் அவரைசிவனாகவும், கிருஷ்ணனாகவும், யேசுவாகவும் அல்லாவாகவும் எல்லாக் கடவுளுமாகவேகண்டனர். இறைவனது தூதராகவும்தெய்வீக வாழ்க்கையின் தூதராகவும் அவர் பலவீனமான மனிதர்களிடையே வாழ்ந்தார். ‘நான் இறைவனின் அடிமை’ என்றார் ‘அல்லாமாலிக்’ (இறைவனே எல்லாவற்றுக்கும் உரிமையாளன்) என்று அடிக்கடி கூறுவார்.

ஆனால் வெவ்வேறு சமயங்களில் அவர் ‘நான்சீரடியிலும் எல்லா இடங்களிலும் வசிக்கிறேன். நான் கடவுள், நான் உருவமற்றவன்; எங்கும் உள்ளவன் நான் எல்லாவற்றுள்ளும் அவற்றைக் கடந்தும் இருக்கின்றேன். ஆகாயம்முழுவதும் நானேநிரம்பியுள்ளேன் நீங்கள் பார்க்கும் எல்லாப் பொருள்களும் ஒன்று சேர்ந்ததே நான், நான் அசைவதில்லை. பிரபஞ்சம் முழுவதும் என்னுள் இருக்கின்றது’ என்று கூறியுள்ளார்.

### குரு பூஜை

குரு பூர்ணிமா தினமொன்றில் கேல்கார் என்பவரைகுரு பூஜை செய்’ என்று பாபாகூறினார் குரு பூஜை என்றால் எனனவென்று அப்போது ஒருவருக்கும்தெரியவில்லை முதல் முதலில் சீரடியில் குரு பூஜை துவங்கியது சாத்தேயின்தாய் மாமனான கேல்க்கார்தான். குரு பூஜை என்றால் என்னவென்று விளக்கும்படி பாபாவிடம் கேட்டுக்கொண்டார். ‘குருவென்றால் யாரென்று நினைக்கிறாய்? மடாதிபதிகள் அல்ல, சந்நியாசிகளுமல்ல குரு வென்பது தெய்வமே. உலகில் எல்லாவற்றையும்விட மிக உயர்வான ஆனந்தம் பிரம்மானந்தம் என்பதே. இது பிரம்மத்தினால்மட்டுமே அனுபவிக்கக் கூடியதாகும். ‘பிரம்மானந்தம் பரமசுகதம்’ என்றால்பரமாத்மாவேதான். பிரம்மானந்தமும் பரம சுகமும் பெற்றவர் என்பது பொருள். ‘கேவலம் ஞான மூர்த்திம்’ என்பதில் ‘ஞானம்’ என்பது உலக அறிவைக் குறிப்பது அல்ல. ‘அத்வைத ஞானமே’ உண்மை ஞானம். அதாவது ஒன்றே தான் பரம் பொருள் என்ற உண்மையை உணர்த்துவதுதான் ஞானம். இதுவே எங்கும் வியாபித்துள்ளது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். இப்படிப் பட்ட உணர்வைப் பெற்றவர் இறைவனே. இதுவே ‘ஞான மூர்த்திம்’ என்பதன் மூலம் உணர்த்தப்படுகிறது. தத்துவ ஞானமென்பது ‘அஹம்பிரம்மாஸ்மி’ நானே பிரம்மம் என்று உணர்தலேயாகும். இது ஒரு வேதவாக்கியம். ‘பிரக்ஞானம் பிரும்மா’ ‘அயமாத்மாபிரும்மா’ ‘தத்வமஸி’ இவைகளும வேத வாக்கியங்களே. இதுவேபிரம்மக்ஞானம் எனப்படுவது. ‘குருர்பிரம்மா, குருவிஷ்ணு, குருதேவோ மகேஸ்வரஸ் ஸ்ரூபமே குரு என்று உணரவேண்டும். ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயமென்ற படைத்தல், காத்தல், அழித்தல் யாவையும் நிகழ்த்தவல்லவரே குரு. அது பரப்பிரம்மத்தை மட்டுமே குறிக்கும்.

### ‘‘நானே நான்’’

கேல்கர் ''ஸ்வாமி, நான் பிரம்மாவைப் பூஜிப்பதா? அல்லது விஷ்ணுவையா, மகேஸ்வரனையா? யாருக்குக் குரு பூஜை செய்வது?'' என்று விளக்கம் கேட்க பாபா ''ஏ சைத்தான்! இங்கேயே இவை யாவும் அடக்கிக் கொண்டுள்ள நான் இருப்பது உனக்குத் தெரியவில்லையா?'' என்று கேட்டார். ''நானே நான்'' என்ற தத்துவத்தை உணர்ந்து பூஜை செய் என்று கூறியதும யாவரும் சீரடி பாபாவேபரமேஸ்வரனென்று கருதலாயினர்.

சீரடி பாபா சமாதிஅடைய முன், ''எனக்கு சீடர் எவரும் கிடையாது. எல்லோரும் எனது பக்தர்களே நான் மீண்டும் ஆறு ஆண்டுகள் கழித்து தரிசனம் தருவேன்'' என்று அப்துல்லா என்ற பக்தருக்கு கூறினார் இதுவே இன்று எம்முன் மனிதனாக நடமாடும் சத்திய சாயி பகவான் என்பதை அகிலஉலகமுமே அவரடி பணிந்து நிற்பதை நாம் கண்ணூடாகக் காணக் கூடியதாக உள்ளது.

பகவான் சத்திய சாயி பாபாவை சீரடி சமஸ்தானைச்சேர்ந்த பக்தர்கள் அண்மையில் சீரடி சாயிபாபா சமாதிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு தங்களை ஆசீர்வதிக்குமாறு கேட்டுக் கொண்டமை இங்குகுறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும். □

## சாயி அருளமுதம்



பிறப்பு-இறப்புத்தொடர் என்னும் வெள்ளத்தைப் பாதுகாப்பாகக் கடப்பதற்கு நிஷ்டை-அதாவது தளர்வுறாத கட்டுப்பாடு என்னும் பாலம் அவசியமாகும். அது ஒரு பலமான பாதுகாப்பான பாலமாக இருக்கவேண்டும். இல்லையானால் நீங்கள் அந்தப் பெருக்கில் அகப்பட்டு மோகம், கோபம் என்னும் சுறாமீன்கள் வாழும் சமுத்திரத்தை அடைவீர்கள். எத்தனையோ எதிர்ப்புகளின் மத்தியிலும் பகவான் மேல் தாம் வைத்திருந்த பிடியைத் தளராது கொண்டிருந்த பிரகலாதன் போன்ற வீரர்களை எண்ணிப் பாருங்கள். தன்னைச் சித்திரவதை செய்து, முறுக்கிப் பிழிந்து எரித்த பொழுதும் பிரகலாதன் பகவானுடைய நாமத்தைச் சொல்வதைக் கைவிடவில்லை. அதே போன்ற மன உறுதியும், பக்தியும் ஒருவருக்கு இருக்கவேண்டும்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

# ஆப்கானின் ஆர்ப்பாட்டக்காரர் அமெ. தூதரகத்துக்கு தீயிட்டனர்!

## புஷ்ஷின் கொடும்பாவியும் எரிப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அமைந்துள்ள அமெரிக்க தூதரகத்திற்கு ஆர்ப்பாட்டக் காரர்கள் நேற்று தீ வைத்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் மீது, அமெரிக்கா தாக்குதல் நடத்த தயாராகியிருப்பதைக் கண்டித்து, காபூலில் ஆயிரம் பேர் கொண்ட ஆர்ப்பாட்டக் குழுவே அமெரிக்கத் தூதரகம் மீது பெற்றோல் நிரப்பப்பட்ட போத்தல்கள் மற்றும், தீப்பந்தங்கள் வீசித் தீக்கிரையாக்கியுள்ளனர்.

தூதரகத்தை கொளுத்திய ஆர்பாட்டகாரர்கள் அமெரிக்க அதிபர்ஜோர்ச்புஷ்சின் கொடும்பாவியை எரித்துள்ளதுடன் அங்குள்ள அமெரிக்க நாட்டுக் கொடிகளையும் அறுத் தெறிந்துள்ளனர்.

கடந்த 12வருடங்களாக இந்த கட்டடத்தில் அமெரிக்கர்கள் எவரும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தலை நகர் காபூலிலுள்ள ஐக்கிய நாடுகள் பணிமனையின்மீதும் ஆர்பாட்டக் காரர்கள் கற்களை வீசி சேதப் படுத்தியுள்ளனர். (உ-7-4)

### 83 இலங்கையரை

றது.

உக்ரைனில் பதிவு செய்யப்பட்ட இந்தக்கப்பல் செங்கடலூடாக மெற்ரெரேனியம் நோக்கி புறப்படுவதற்கு சற்று முன்னரே இவ்வனர்த்தம் நிகழ்ந்துள்ளது. இக்கப்பலில் சென்ற ஏனையவர்கள் அருகில் நின்ற மற்றைய கப்பல் மாலுமிகளால் காப்பாற்றப் பட்டுள்ளதாக நம்பப்படுகிறது. (ந-5)

### வவுனியாவில்

பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும், வவுனியா இராணுவ பிரிகேடியர், மற்றும பொலிஸ்மா அதிபருக்கும் அவசர கடிதங்களை அனுப்பிவைத்துள்ளனர்

இதேவேளை வவுனியாவில் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள பாடசாலைகளின் அதிபர்களை வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம் எம் தர்மரட்ணா நேற்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பாடசாலை அதிபர்களுடன் நடைபெற்ற சந்திப்பின் போது,

வவுனியாவில்உள்ள 4பாடசாலைமாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடு பட்டிருப்பதனால் பாடசாலைகள் மூடப் பட்டிருப்பதுடன் கல்விச் செயற்பா டுகளும் பாதிப் படைந்துள்ளன இந் நிலையில் சிவில்நிர்வாகம் சீர் குலையக் கூடிய அறிகுறிகள் தென்படுவதால் பெற்றோர்ஆசிரியசங்கத்தைக்கூட்டிபெற்றோர்கள் மூலம் மாணவர்களைப் பாடசாலைகளுக்கு அனுப்ப ஏற்பாடுகளை செய்யுமாறும் பிரதி பொலிஸ்மா அதிபர் பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### ஆப்கான்

நீண்டதாகவும் அபாயகரமானதாகவும் இருக்குமென்றும் உயிரிழப்புக்கள்பல ஏற்படுமென்றும் அவர்மேலும் கூறினார். (ந-4)

### மூத்த

ஒரு புனிதமான நினைவு நாளில் மூத்த தலைவர்களில் ஒருவரைக் கொலை புரிந்த செயலானது சிங்கள அரசின் குரோத மனப் பான்மையையும், போர் வெறியையும் வெளிப்படுத்திக் காட்டுகிறது

ஒருபுறம் சர்வதேச சமூகத்திற்கு சமாதான வேடத்தைக் காட்டிக் கொண்டு மறுபுறம் ஆத்திர மூட்டும் வன் முறைச் செயல்களில் சந்திரிக்கா அரசு ஈடுபட்டு வருகிறது. தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குபோர்மூலமான தீர்வையே அரசாங்கம் விரும்புகின்றது.

போர் நெருக்கடியை தணித்து போர் ஓய்ந்த சூழலை உருவாக்க முயற்சிப்பதாக உலகத்திற்கு கூறிக் கொண்டு போரைத் தூண்டி விடும் ஆத்திரமூட்டும் செயல்களை அரசாங்கம் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறது.

இத்தகைய ஆத்திர மூட்டும நடவடிக்கைகளால் எழக்கூடிய பாரதூரமான விளைவுகளுக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பும் ஏற்க வேண்டுமென்று விடுதலைப் புலிகள் விடுத்த அந்த அறிக்கையில் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. (வ)

### ஆட்டோ சாரதியும்

கொழும்புக்கு அனுப்பி வைப்பதற்காக ஒரேகுடுபத்தைச் சேர்ந்த ஆறு பேர் வீட்டில் இருந்து வாடகைக்கு ஆட்டோஅமர்த்தி யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்ட போது வீட்டுக்குமிக அருகில் குளுக்கண்டி லேனில்ஆட்டோ அமுக்கவெடியில் சிக்கிச்சிதறியதில் அதில்பயணம்செய்த ஆறுபேரும் உடல்சிதறிப்பலியானமை தெரிந்ததே.

இச்சம்பவத்திலேயே ஆட்டோசாரதி படுகாயமடைந்து யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தார்.

ஆட்டோவின் சாரதியும் உரிமையாளருமான அமரர் சசிகுமார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நினைவு திரும்பியபோது மனைவி பிள்ளைகளுடனும் உறவினர்களுடனும் மனம் திறந்துபேசியிருந்தார்.

அப்போதுஅவர்ஆட்டோவில் பிரஸ்தாப குடும்பத்தவர்களை ஏற்றிக்கொண்டு குளுக்கண்டிலேனில் மெதுவாக வந்துகொண்டிருந்த போது திடீரென மின்னல்போன்ற வெளிச்சத்துடன் பயங்கர வெடி வெடித்ததாகத் தெரிவித்தார்.

கண்ணைமூடி முழிப்பதற்குள் வெடி வெடித்ததுடன் தான் அருகில்உள்ளபற்றைக்குள் தூக்கிவீசப்பட்டதாகவும் தன்னைக் காப்பாற்றுமாறு தான்உதவிநாடிக் கத்தியதாகவும் தெரிவித்தார்.

இதே வேளை தான் ஆட்டோவில்ஏற்றிவந்த குடும்பத்தவர்கள் இறந்தசெய்தியை அறியாதஅவர் அவர்களைப் பற்றி விசாரித்ததுடன் அவர்கள் நலமாக உள்ளார்களா எனவும் கேட்டுள்ளார்.

அத்துடன்தனது ஆட்டோவுக்கு என்னசேதமஏற்பட்டது என்பதையும் ஆட்டோவை தற்பொழுது எங்கு நிறுத்தியுள்ளீர்கள எனவும் கேட்டுள்ளார்.

இதேவேளை நேற்றுஆட்டோசாரதியும் உயிரிழந்துள்ளதையடுத்து மொத்தத்தில் ஆட்டோவில் பயணம் செய்த அனைவரும் உயிரிழந்ததுடன் பிரஸ்தாபஆட்டோவும் சுக்குநூறாக நொருங்கியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்அமுக்கவெடிச் சம்பவத்தினால் கோப்பாய் இருபாலைப் பகுதிஎங்கும் கடந்த மூன்றுநாட்களாக பெரும் சோகமயமாக உள்ளது.

இவரது மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். நகரப்பகுதியெங்கும் நேற்று வாழைகள், தோரணங்கள் கறுப்புக் கொடிகள் என்பன கட்டப்பட்டிருந்தன.

(இ. உ, 2, 9, 19, 217, 225, 223)

# விவசாயிகளின் நலன்கருதி வரி தரகுக்கூலிகளில் சந்தைகளில்பொது ஒழுங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளின் நன்மை கருதி உள்ளூர் சந்தைகளில் அறவீடு செய்யப்பட்டு வருகின்ற வரி, தரகுக் கூலி மற்றும் நிறைக் கழிவு போன்ற விடயங்களில் பொது ஒழுங்கு முறை விரைவில் அமுல் நடத்தப்படும்.

இவ்வாறு நல்லூர் பிரதேச சபைத்தலைவர் ந.மணி பல்லவராஜன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகள் மாநாடு அண்மையில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் நடை பெற்ற போது விவசாயிகள் பலர் சந்தைக்குச் சந்தை வரி தரகுக்கூலி கழிவு நடை முறைகளில் வேறுபாடு காணப்படுவதைச் சுட்டிக் காட்டிப் பேசினர்.

சந்தைகளைக் குத்தகைக்கு விடாமல் பிரதேச சபைகளின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவது குறித்தும் தமிழ்நாட்டின் உழவர்சந்தைகளைப்போல விவசாயிகளே நேரடியாக விற்பனை செய்யக்கூடிய நிலமையைத்தோற்றுவிப்பது குறித்தும்விவசாயிகள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இவ்விடயத்தில் குறுக்கிட்ட நல்லூர் பிரதேசசபைத்தலைவர் எமது கட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேச சபைகளின் தலைவர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து அது தொடர்பாக ஆலோசித்து தகுந்த திட்டமொன்றை வகுத்து விரைவில் நடைமுறைப்படுத்த உள்ளோம்எனத் தெரிவித்தார். (உ)

### மாட்டுக்கு

கூறப்படுவதாவது:

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் உள்ளவீடொன்றில் மாடுநுழைந்தபோது அதனை விரட்ட அண்ணன் கல்லால் எறியும் போது அந்தக்கல் எதிரே வந்த தங்கையின் தலையைத் தாக்கியது. இதனால் அவர் அந்த இடத்திலேயே மயங்கி விழுந்தார். உடனடியாக வவுனியாஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப் பட்டபோது அங்கு அவர் மரணமானார்.

வவுனியா பதில் நீதிவான் எம்.சிற்றம்பலம் விபத்து மரணமென்று தீர்ப்பளித்துஇறந்தவரின் அண்ணனான பூபாலசிங்கம் யூட்டை (வயது-18) 25 ஆயிரம் ரூபாசரீரப்பிணையில் செல்ல அனுமதித்தார். (வ)

### இனப்பிரச்சினையை

திருத்த சட்ட மூலம்தொடர்பாக விடுத்தஅறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அவ்வாறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது.

நாட்டின் தலையாய பிரச்சினையாகிய தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வொன்றை காண்பதில் உடன்பாடு காணாத பெரும்பான்மை கட்சிகள் புதிய அரசியல் 'கலாசாரம்' 'ஜனநாயகப் பாரம்பரியம்' எனற கோசங்களுடன் தமக்குள் அதிகாரப் பகிர்வை நோக்காகக் கொண்டு ஒற்றுமையுடன் செயல்படுவதாகத் தோன்றுகிறது.

இனப்பிரச்சினைக்கான தீர்வில் 18 வருடங்களாக ஒரு உடன் பாட்டுக்கு வரமுடியாத மூன்று பெரும்பான்மைக் கட்சிகளும் தங்கள் நலன்களைப் பேணும் நோக்குடன் வெறும் 18நாட்களுள் உடன் பாடொன்றைக் கண்டு கொண்டதானது இக்கட்சிகளுக்கு இனப்பிரச்சினைக்கான தீர்வில் உண்மையான அக்கறை இல்லை என்பதையே கோடிட்டு காட்டுகிறது. நாட்டைக் கொதி நிலையில் வைத்திருக்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வொன்று எட்டப்படாமல் அமைக்கப்படும் எந்த ஒரு ஆணைக்குழுக்களாலோ அலலது வேறுதீர்மானங்களாலோ நாட்டில் அமைதியையோ ஜனநாயகத்தையோ கொண்டுவந்துவிட முடியாது என்ற யதார்த்தத்தை கருத்தில் கொண்டு பெரும்பான்மைக் கட்சிகள் இந்தப் 17வது அரசியல் அமைப்பு திருத்தத்தில் ஒருஉடன் பாட்டை எட்டியது போல்இனப் பிரச்சினை தீர்விலும் காலம் தாழ்த்தாது தமிழ்பேசும்மக்களின அபிலாசைகளை பூர்த்தி செய்யக் கூடிய வகையிலான உடன்பாடொன்றைக் கண்டு நாட்டை அழிவுப் பாதையிலிருந்து மீட்கவேண்டியது அவசியம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)


## வெளி வந்து விட்டது

**கணக்கீடு** பங்குடமை பயிற்சி நூல்

ஆசிரியர்: எஸ். தவா B.Com Hon's(Acc.Spl)

யாழ் குடாநாட்டின் பிரபல புத்தகசாலையிலும், கல்வி கற்பிக்கின்ற நிறுவனங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். (3588)


## பிரிவுத்துயர் பகிர்வு

சாவல்கட்டை சேர்ந்த தம்பையா ரங்கநாதன் நேற்று அகாலமரணமடைந்துள்ளார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்றன.

தகவல்

திரு.கே.ஆனந்தவேல்


# வாடிக்கையாளருக்கு ஒரு செய்தி

எமது அன்பார்ந்த வாடிக்கையாளருக்கு தெரிவித்துக்கொள்வது. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (30-09-2001) பிறீமா மா இறக்கும் பணி ஆரம்பமாவதால் அதற்குமுன் எம்மிடம் தொடர்பு கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வீ.எஸ்.பி. குறூப்
275, 277 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P. 021 - 2150
FaX. 021 - 2140

[கி/2644]


இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.